
# திருக்கோயில்

பிப்ரவரி 1992 விலை ரூ.3





திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்திற்கு அண்மையில் மேதகு தமிழக ஆளுநர் பீஷ்மநாராயண சிங் அவர்களும், இங்கிலாந்து நாட்டின் இந்தியத் தூதர் மாண்புமிகு எல். எம். சிங்வி அவர்களும் வருகை புரிந்தனர். ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான ப. தனபால், எம்.ஏ. பி.எல்., அவர்களும் உடன் உள்ளார்.

முகப்பு

திருப்போரூர்
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2023 பிரஜோற்பத்தி ஆண்டு மாசி | மணி |
|---|---|---|
| 34 | பிப்ரவரி 1992 விலை ரூ. 3-00 | 2 |


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

திருமூலநாயனார்
– டாக்டர் த. அமிர்தலிங்கம்

கும்பகோணத்தில் கோயில்கள்
– கதிர்தமிழ்வாணன்

படைக்கலாமா படையல்!
– ஞானச்சேரி ஞானிகள்

மகாமகமகத்துவம்
– தவத்திரு டாக்டர் சிவபிருந்தாதேவி

கந்தவேள் கருணை
– டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
– கம்பன்கவிநயமணி வே. தியாகராஜன்

காத்தருளும் கஞ்சமலைச் சித்தர்
– திருமதி சௌந்திராகைலாசம்

லிங்கபுராணம்
– வித்யாவாசஸ்பதி டாக்டர் இரா. நாகசாமி

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணம்
– கே. சண்முகம் பி.காம்.

சித்திரபாரதம்
– செவ்வேள்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# திருமூல நாயனார்

டாக்டர் **த. அமிர்தலிங்கம்**

சிவயோகியும் சித்தருமாகிய திருமூலர் இன்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகக் கணக்கிடப்படுகிறார். அவர் தோன்றிய காலம் கி.மு. 6,000 என்பது பல அறிஞர்கள் முடிவு.

சுந்தரர் என்பது திருமூலரின் இயற் பெயர். தென்பாண்டி நாட்டில் தோன்றிய இவர் பொதிகையில் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த அகத்தியரின் மாணவராகத் தமிழ் அறிவு நூல்களைக் கற்றுக் கொண்டார். பின் அகத்திய முனிவரின் அறிவுரையின் படி கயிலை மலைச் சாரல் சென்று யோக ஞான நூல்களை கற்றுக் கொண்டார். பின் கயிலைக்கே சென்று நந்தியெம்பெருமானின் மாணவர் ஆனார். நந்தியெம்பெருமான் இவருக்கு நாதர் என்ற பட்டம் வழங்க 'சுந்தர நாதர்' ஆனார், நந்தியெம் பெருமானிடம் சுந்தரர் பயின்றபோது அவரிடம் பயின்ற மற்ற மாணாக்கர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய எழுவர் ஆவர். திருமூலராகிய சுந்தரரையும், சேர்த்து எண்மர் நந்தியெம்பெருமானிடம் கற்றுத் தேர்ந்தமையைத் திருமந்திரத்தில்,

''நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே'' (120)

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

சிவபெருமான் தம்முடைய திருமுகங்களிலிருந்து சிவாகமங்களைத் தோற்றுவித்தார். சிவபெருமான் முதலில் தோற்றுவித்த சிவாகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தம் வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம் ஆகிய ஒன்பது ஆகமங்கள் ஆகும்.

''தவமாம் பிரமீசர் தம்மிற்றாம் பெற்ற
நவஆகமம் எங்கள் நந்தி பெற்றானே'' (72)

''பெற்ற நல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம், உயர்சிந்தம் வாதுளம்
மற்றவவ் வியாமளம் ஆகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே'' (73)

எனவரும் திருமந்திரப் பாடற் பகுதிகளால் ஆகமங்கள் ஒன்பதாவதை அறியலாம். அவ்வொன்பது ஆகமங்களையே நந்தியெம் பெருமான் சுந்தரநாதர் உள்ளிட்ட எண்மர் மாணாக்கர்களுக்கு உபதேசித்துள்ளார்.

நந்தியெம்பெருமானின் மாணவராக ஆகமங்களைப் பயின்று வந்த காலத்தில், சிதம்பரத் தலத்தில் கூத்தபெருமானின் திரு நடனக் கோலம் காண விரும்பிய பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகியோருடன் சுந்தரநாதரும் சிதம்பரம் வந்து சிவபெருமானைத் தரிசித்து உள்ளார்.

''செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்று
அப்படி நல்கும் அருணந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந்தேனே'' (136)

என்ற திருமந்திரப் பாடல், தில்லையில் நடராஜர் பெருமானைத் தரிசனம் செய்தபின் திருமூலர் மீண்டும் கயிலைக்கே சென்று தவ யோகத்தில் எண்ணற்ற காலம் ஈடுபட்டமையை விளக்கும்.

பிறகு அவர் தம்முடைய ஆசிரியரான அகத்தியரைக் காண விரும்பி மறுமுறை தமிழகம் வந்த பொழுதே அவருக்குத் 'திருமூலர்' என்ற பெயர் ஏற்படக் காரணமான நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

அகத்தியர் தங்கி வாழ்ந்து வந்த பொதிகை மலையை நோக்கி ஆகாய வழியாக வந்த சுந்தரநாதர் வழியில் திருக்கேதாரம், பசுபதி நேபாளம், காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி திருவாலங்காடு, திருக்கச்சி ஏகம்பம், திருவதிகை, பெரும்பற்றப் புலியூர் முதலான சிவத் தலங்களைக் கண்டு வணங்கி, இறுதியில் திருவாவடுதுறைக்கு வந்து அங்கு எழுந்தருளியுள்ள சிவ பெருமானை வணங்கி வழிபட்டார். அத்தலத்தை விட்டு புறப்பட அவருக்கு ஏனோ மனமே வராமல், அவருடைய மனம் திருவாவடுதுறை ஈசன்பால் ஒன்றி நின்றது. தம்மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு தென் பொதிகை செல்லலாம் என அவர் திருவாவடுதுறையை விட்டுப் புறப்பட்டு காவிரியின் கரைக்கு வந்த போது அங்கே ஒரு காட்சியைக் கண்டார்.

திருவாவடுதுறையை ஒட்டி, அதன் தென்புறம் இருக்கும் ஊர் சாத்தனூர், சாத்தனூரில் மூலன் என்ற இடையன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் வழக்கம்போல் பசுக்கூட்



## திருக்கோயில் பணியாளர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்த கருணைத் தொகை

*நம் இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில்களில் முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ. 350-ம் முதுநிலை அல்லாத மற்ற திருக் கோயில் பணியாளர்களுக்கு ரூ. 300-ம் 1992ஆம் ஆண்டிற்குக் கருணைத் தொகையாக வழங்க நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள்.*

டங்களை மேய்க்க வந்தவன், பாம்பு கடித்து மாண்டுபோனான். அவன்பால், அன்பு கொண்ட பசுக்கள், அவனைச் சூழ்ந்து நின்று கண்ணீர் சிந்தி அழுதுகொண்டு இருந்தன. இடையன் உடலைச் சுற்றிச் சுற்றி வந்து அவனை மோந்து, பசுக் கூட்டங்கள் கதறிக் கண்ணீர் விடுவதைக் கண்ட சுந்தரநாதர், அவ் விடையன் மீண்டும் உயிர் பிழைத்தால் அன்றி பசுக்கூட்டத்தின் துயரம் அகலாது என்பதை எண்ணி, தாம் பெற்றிருந்த அட்டமா சித்தி களில் ஒன்றாகிய கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தி யினால் இடையன் உடலுக்குள் தம்முயிரைக் கொண்டு செலுத்த திருவுள்ளம் பாலித்து அவ்வாறே செய்தருளினார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் பெரியபுராணம் பாடிய சேக் கிழார் பெருமான் திருமூல நாயனார் புராணத் தில் இவற்றை எல்லாம் விரிவுபடப் பாடியிருக் கிறார்.

''மற்றவன்தன் உடம்பினையக் கோக்குலங்கள்
வந்தணைந்து
சுற்றமிகக் கதறுவன சுழல்வனமோப் பனவாக
நற்றவயோ கியர்காணா நம்பரரு ளாலே
உற்றதுயர் இவைநீங்க ஒழிப்பன் என
அயர்கின்றார்.

(பெரிய புராணம், திருமூலர் 12)

''இவனுயிர் பெற் றாலன்றி யாக்களிடர்
நீங்கா'வென்
றவனுடலிற் றம்முயிரை யடைவிக்க
வருள்புரியுந்
தவமுனிவர் தம்முடலுக் கரண்செய்து
தாமுயன்ற
பவனவழி யவனுடலிற் றம்முயிரைப்
பாய்த்தினார்.''

(பெரியபுராணம் திருமூலர் 13)

இவ்வாறு மூலன் என்ற இடையன் உடலில் தம்முயிரைச் சுந்தரநாதர் செலுத்தி திருமூல ராக ஆவினம் மகிழ உயிர் பெற்றெழுந்தார். ஆவினங்களைத் தொடர்ந்து சென்று, ஆக்கள் தம்தம் இல்லங்களைப் போய் அடையக்கண்டு மகிழ்ந்தார்.

அன்றைய இரவு சாத்தனூர் மடம் ஒன்றில் திருமூலர் தங்க, இடையன் மூலனின் மனைவி, திருமூலரைத்தன் இல்லத்திற்கு வர அழைத்தாள். திருமூலர் பதிலொன்றும் கூறாமல் தவயோகத்தில் ஈடுபட்டிருக்க இவ ருக்குப் பித்து பிடித்து விட்டதோ எனமயங்கித் தம் ஊராரையும் அழைத்து வந்து, திருமூலர் செய்கையை அவர்களுக்குக் காட்டினாள். சிவ யோகத்தில் ஈடுபட்டு நிற்பவர் சுந்தரநாதர் என்பதைத் தெளியாத அவர்கள், மூலனே இறையருளால் யோகியானான் என்பதாகக் கொண்டு, அவன் இனி இல்லறத்திற்குப் பயன் படமாட்டான் என்பதாக இடையனின் மனைவிக்கு ஆறுதல் கூறி அவளை அழைத்துச் சென்று விட்டனர். இடையனின் உடலுக்குள் இனித்தாம் இருக்க வேண்டா என்று நினைத்து சுந்தரநாதர் மறைவிடத்திற்குச் சென்று தாம் பாதுகாப்பாகவைத்த தம்முடலைத் தேடினார்.

ஆனால் அங்கே அவருடைய உடல் இருக்க வில்லை. ''சிவாகமங்களை திருமூலனாய்த் தமிழில் படைக்க வேண்டுமென விரும்பி சிவ பெருமானே தம்முடலை மறைத்தனன்'' என்ப தாகச் சுந்தரநாதர் தெளிந்து, அற்றை நாள் முதல் திருமூலர் என்ற திருநாமம் பூண்டவ ராய் திருவாவடுதுறை சிவபெருமானின் ஆல யத்திற்கே திரும்ப வந்து அரச மரத்தடியில் இருக்கை கொண்டு மூவாயிரம் ஆண்டுக் காலம் சிவயோகத்தில் ஈடுபடுவார் ஆயினார்.

நந்தியெம்பெருமான் தமக்கு அறிவுறுத் திய சிவாகமங்கள் ஒன்பதினை ஒன்பது தந்தி ரங்களாக வகுத்துக் கொண்டு ஆண்டொன் றுக்கு ஒரு பாடல் வீதம் 3,000 ஆண்டுகளுக்கு மூவாயிரம் தமிழ் மந்திரங்களைத் திருமந்திர மாகத் திருமூலர் யாத்தருளினார். 3,000 ஆண்டுகள் திருவாவடுதுறையில் யோகத்தில் அமர்ந்து, இவ்வாறு திருமந்திரம் வழங்கிய பின் திருமூலர் மீண்டும் திருக்கயிலையை அடைந்து சிவபெருமானின் திருவடி அடைந்தார் என்பது அவர்தம் வரலாறு.

''ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத்
தோருய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்
திரமாலை
பான்மைமுறை யோராண்டுக் கொன்றாகப்
பரம்பொருளாம்
ஏனஎயி றணிந்தாரை 'யொன்றவன்தான்'
என வெடுத்து''

''முன்னியவப் பொருண்மாலைத்
தமிழ்மூவாயிரஞ்சாத்தி
மன்னியமு வாயிரத்தாண் டிப்புவிமேல்
மகிழ்ந்திருந்து
சென்னிமதி பணிந்தார்தம் திருவருளால்
திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத்
தாளடைந்தார்''

(பெரியபுராணம்: திருமூலர் 26, 27)

என்பர் சேக்கிழார்.

சேக்கிழார் இவ்வாறு பன்னிரண்டாம் நூற்றாண்டில் தாம் பாடிய பெரிய புராணத் தில் திருமூலநாயனார் வரலாற்றை விரிவாகப் பாடியிருக்கிறார். அவருக்கு முன்னமே பத் தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய திருத்தொண்டர் திருவந் தாதியில் திருமூலர் வரலாற்றை

''குடிமன்னுசாத்தனூர்க்கோக்குல மேய்ப்போன்
குரம்பை புக்கு
முடிமன்ற கூனற் பிறையாளன் தன்னை
முத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே
பரவிட்டென்றுச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூல னாகின்ற
வங்கணனே.''

என்று பாடியிருப்பதாலும், நம்பியாண்டார் நம்பிக்கு முன்னமே வாழ்ந்திருந்த சுந்தரர், தம் திருத்தொண்டர் திருத்தொகையில் ''நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்'' எனக் குறிப்பிட்டிருப்பதாலும், அவருக்குமுன் வாழ்ந் திருந்த திருஞான சம்பந்தரே திருவாவடு துறையின் கண்மறைவாக வைக்கப்பட்டிருந்த திருமூலரின் திருமந்திரத்தைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினார் என்று ஒரு வரலாறு கூறப் படுவதாலும் திருமூலர் கி.பி. 7-ஆம்நூற்றாண் டிற்கு முன் தமிழகத்தில் வாழ்ந்திருந்த தவ ஞானி என்பது தெளிவாக விளங்குகிறது.

''உடம்பார் அழியில் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞ் ஞானம் சேரவும்மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே''

—திருமந்திரம்

திருமூலர் தமிழகத்தில் தோன்றி வாழ்ந் திருந்த காலத்தை அறிஞர்கள் வரையறை செய்யும்போது அவர் திருவாவடுதுறையில் சிவயோகத்தில் திளைத்திருந்தது மூவாயிரம் ஆண்டுகள் என்றும் அதற்கு முன் அவர் கயிலை யில் நந்தியெம் பெருமானின் மாணாக்கராய் சிவாகமங்களைக் கற்றுத் தியானத்தில் ஆழ்ந் திருந்தது ஒரு மூவாயிரம் ஆண்டுகள் என்றும் ஆக அவர் புவியுலகில் வாழ்ந்திருந்த காலம் ஏறக்குறைய ஆறாயிரம் ஆண்டுகள் என்றும் கி.மு. 6000 ஆவது ஆண்டு வாக்கில் தோன்றி கி.பி. ஒன்று வரை திருமூலர் வாழ்ந்திருத்தல் வேண்டும் எனவும் வரையறை செய்கின்றனர். இவ்வளவு நீண்டகாலம் வாழ்வது சாத்திய மாகுமா என்று ஐயப்படுவார்க்குத் திருமூலர் தம் திருமந்திரத்திலிருந்தே பல அகச் சான்றுகள் காட்டப்படுகின்றன.

''தப்பிலா மன்றில் தனிக் கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே'' (136)

''இருந்தேனிக் காயத்தில்எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற விடத்தே
இருந்தேன் இமயவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே''(102)

என்பன போன்ற திருமந்திரப் பாடல்களால் அவர் கயிலாயத்தின் கண் நந்திதேவரின் மாணக்கராய் இருந்த காலத்தும் சுமார் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருத்தல் வேண் டும் என்பது கூறப்படுகின்றது. திருவாவடு துறையிலும் அரச மரத்தடியில் சிவயோகத்தில் அவர் 3,000 ஆண்டுகள் வாழ்ந்திருந்தமையை சேக்கிழார் வாக்கினாலும் கண்டோம். இன்னும் திருமூலரே தம் திருமந்திரத்தில்,

''சேர்ந்திருந்தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை,
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே'' (140)

என்பதில் தாம் திருவாவடுதுறை ஆலயத்தின் அரச மரத்தினடியில் தங்கிச் சிவயோகத்தில் திளைத்திருந்தமையைச் செப்புகிறார்.

[இதன் தொடர்ச்சி 32ஆம் பக்கம்]

# கும்பகோணத்தில் கோயில்கள்

கதிர். தமிழ்வாணன், குடந்தை.

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்
தொடங்கினர்க் கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே''

என்றார் தாயுமான அடிகள். இம்மூவகையிலும் சிறப்புமிக்கது குடந்தைத் திருநகர்.

1. மூர்த்தி-இறைவன் கும்பநாயகர் (கும்பேசர்)
2. தலம்-இடம்-குடமூக்கு (குடந்தை)
3. தீர்த்தம்-தூநீர்-மாமகத்தூநீர்.

இத்திருநகர் குடமூக்கு என்றும், குடந்தை என்றும் தேவாரத் திருப்பதிகங்களில் குறிக்கப் பெறுகின்றது.

இஃது ஓர் ஊழிக் காலத்தின் ஞான்று, அனைத்து உயிர்களையும் ஒரு சேரக் கொண்டு வைக்கப்பட்டிருந்த அமுதகுடத்தை, இறைவன் வேடவடிவந்தாங்கி, அம்பினால் அடித்தபோது உடைந்த மூக்கின் வழியாக அமுதம் நாற்றிசையும் பரவி நின்ற காரணத்தால் குடமூக்கு என்னும் பெயர் பெற்றது என்பது புராண வரலாறு. இத்திருநகரில் எழுந்தருளியிருக்கும் கும்பநாயகரை நாற்றிசையோரும் வணங்குகின்றனர் என்பதை

''நாற்றிசையோர்பரவு திருக் குடமூக்கு''

எனச் சேக்கிழார் அடிகள் சிறப்பிக்கின்றார்.

இத்திருநகரை நான்முகன், இந்திரன், காய்கதிர்ச் செல்வன், காசிப முனிவர், சுதன்மன், ஞானவான் என்ற அந்தணர்கள், கிருதவீரியன், வீரவர்மன் முதலிய அரசர்கள், மாந்தாதா, கர்மசன்மா, சுவர்ணரோமன் முதலான பலரும் வழிபட்டுப் பேறுபெற்றனர்.

பாட்டனார் தம் காலத்தில் கட்டியபாங்கானவீட்டைப்பேரன் தன் காலத்தில் பெயர்த்தெடுத்துப் புதுப்பித்துப் பொலிவாக்கி-வலியூட்டி அதில் தன் குடும்பத்துடன் உறைந்து நிறைந்து மகிழ்ந்து வாழ்வதை இன்றும் நாம் காண்கின்றோம்.

அதைப் போலவே பரந்து விரிந்துள்ள இப்பேருலகாகியப் பெருவீட்டைப் படைத்தளித்துப் பேணும் பரமன், அதனை மாற்றியமைக்கத் திருவுளங்கொள்வது அவனது இயல்பு. அஃது; அப்பரம்பொருளின் திருவிளையாடல்களில் ஒன்று. அங்ஙனம் மாற்றப்படும் காலமே ஊழிக்காலமாம்.

அங்ஙனம் ஏற்பட்ட ஓர் ஊழிக்காலத்தின் ஞான்றுவெள்ளப் பெருக்கு விரைதற்கு முன்பு, நான்முகன் ஐம்முகனையணுகி, இந்நீர்ப் பெருக்கால்படைப்புதொழில் அழிந்துபடுமோவென ஐயுற்று, தீதொன்றும் வாராது தடுக்கத் திருவாய் மலர்ந்தருளப் பணிந்து வேண்டி நின்றார்.


இதனைச் செவிமடுத்த சிவபெருமான், அமரருலகத்தின் கண் உள்ள அமுதத்தைய நீராகக் கொண்டு மண்ணுடன் கலந்து பிசைந்து ஒரு குடமாக்கி அதனுள் அமுதத்தை நிரப்பி, மேலே மாவிலை, வில்வம், தேங்காய் ஆகியவற்றைச் சார்த்தி, நாணலால் முடியிட்டு உறிபோல் செப்பனிட்டு. அக்குடத்திற்கு மஞ்சள் பூசி குங்குமம் இட்டு, பன்னீரால் முழுக்காட்டி ஒளிவழி பாடாற்றி, மேருவின் மேற்பால் அமைத்திடக் கட்டளையிட்டருளினார்.

நன்றுடையான் நவின்ற வண்ணம் நான்முகனும் செய்தமைத்தார். பின்பு, ஊழிக்காலத்து ஏற்பட்ட நீர்ப்பெருக்கின் அலைகளால் அக்குடம் அடித்துச் செல்லப்பட்டு வட நாட்டிலிருந்து தென்னாடு நோக்கிச் சுழன்று வந்தது. இவ்வாறு வந்த அவ்வமுத குடத்தி லிருந்த மாவிலையும், நாணலும் பெருங்காற்றால் வீசப்பட்டு ஓரிடத்தில் விழ, அங்கே வன்னிமரமும், இலிங்கமும் தோன்றின. தொடர்ந்து பின்னும் அக்குடம் வெள்ளப் பெருக்கின் அலைகளில் மிதந்து செல்லவே, நான்முகனும் அதனைப் பிடிக்க மாட்டாமையால் பின் தொடர்ந்தே சென்றான்.

''வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவான் கண்டாய்'' என்றஅப்பரடிகளின் அருள்மொழிக்கிணங்க, அனைத்து முணர்ந்த அண்ணல் சிவபெருமான், தான் ஒரு வேட வடிவம் தாங்கி ஓர் அம்பினால் அக்குடத்தைத் தகர்த்தார். அதன் ஒவ்வொரு பகுதியும் சிதறி விழுந்த இடம் ஒவ்வோர் திருவூர்களாயிற்று.

இறைவன் நின்று அம்பு விட்ட இடம் பாணாபுரம் என்றும், அம்பினால் உடைபட்ட அமுதகுடத்தின் வாயில் சிதறிப்போய் விழுந்த இடம் குடவாயில் எனவும், குடமூக்கு வழியாக அமுதம் நாற்புறமும் பரவி நின்ற இடம் குடமூக்கு (குடந்தை) எனவும், கும்பக்கலயம் நின்ற இடம் கலய நல்லூர் (சாக்கோட்டை) எனவும் இங்ஙனம் அமுதகுடம் சிதறி விழுந்த ஒவ்வோரிடமும் சிவத்திருவூர்களாயின.

இறைவன் தாம் ஏவிய அம்பினால் இடந்த அமுத குடத்திலிருந்து அமுதம் வழியவே, கும்பத்தின் அடியிலிருந்த மணலோடு அமுதத்தைச்



**மகாமகக் குளத்தில் நவகன்னியர் தீர்த்தமாடும் காட்சி**

கலந்து பிசைந்து, சிவலிங்கம், அமைத்துத் தாமே வழிபட்டு, அச்சிவலிங்கத்துள் தன்னுருவைக் கரந்தருளினார். கயிலையினின்று போந்த உமையம்மையும், மங்கல நாயகி என்ற திருப்பெயரோடு அருகே அமைந்தனள்.

இவ்வாறு கும்பத்திலிருந்து மணலையும் அமுதத்தையும் கொண்டு சிவலிங்கம் அமைத்து அதில் தாம் எழுந்தருளியமையால், கும்பநாயகர், கும்பமுடையார் (கும்பேசர்)என்றும், மலரவனின் மாபெரும் படைப்பிற்கு முன்பே முதலில் எழுந்தருளியமையால், ஆதிகும்பேசர் என்றும், அமுதகும்பேசர் என்றும் இன்ன பிறவாறும் பெயர்கள் வழங்கலாயிற்று.

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
  யிப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
  குறியிவறு குணத்தொண்டு கொண்டார்
போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
  சரசுவதிபொற் றாமரைபுட் கரணி
தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
  குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங்
கூத்தனாரே''
-ஆளுடை அரசு

சிவபெருமானால் பிளக்கப்பட்ட குடத்திலிருந்து அமுதம், இரண்டுகிணறுகளாகத் தேங்கி நின்றது. இவையே புனித நன்னீராகிய பொற்றாமரைக் குளமும், மகாமகக்குளமும் ஆகும். இவற்றுள்ஒன்றாகிய மாமகக் குளத்து நீரே மாமக நன்னீராயிற்று. இப்புனிதத் தூநீராடும் பொன்னான வாய்ப்பு-பன்னீராண்டுகட்கு ஒருமுறையே வாய்க்கப் பெறுகின்றது. இவ்வரிய பெரும் பேற்றினை


''பூமருவும் கங்கை முதல் புனிதமாம் பெருந் தீர்த்தம் மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில்'' என்று சிறப்பித்து ஓதுகின்றார் தெய்வச் சேக்கிழார்.

கும்பநாயகருக்குத் தேவர்கள்திருவிழா நடாத்த விழைந்து ஒன்பது நாட்கள் விழா எடுத்த பின் பத்தாம் நாளன்று நான்முகன் இந்நன்னீராடி வழிபட்டு, அப்பெருவிழாவை நிறைவுபடுத்தினார். அந்நன்னாளே மகாமக புனிதப் பொன்னாள் ஆகும்.

கி.பி. 1992-ஆம் ஆண்டில் வாழ்ந்து கொண்டு இருக்கும் நாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் - உலகளாவிய அறிவியல் வளர்ச்சிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் வாழ்ந்த இந்திய தேசிய விடுதலைப்பெரும்பாவலர் மகாகவி பாரதியார் தமிழின் சிறப்பையும்-தமிழரின் திறத்தையும் வியந்து நினைந்து

''வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே''.

எனப் பாடிப் பரவி மண்ணுலகில் பிறந்த மாத்தமிழ், விண்ணுலகையும் அளந்ததென வியக்கின்றார்.



அருள்மிகு கும்பேஸ்வரர்

என்ன பொருள்? விண்ணகத்து வீதியிலே விளங்குகின்ற விண்மீன்களையும் வியங்கோள்களையும் அவற்றின் கூறுகளையும்பற்றிய இயக்க இயல்பினை அளந்து அறிந்த அருமைப் பாடுடையது நம் அருந்தமிழ்.

இற்றைக் காலத்தில் வாழும் நம்மிற்பலர் இவ்வுண்மையை அறிந்தோ, அறிந்தும் அறியாததைப் போன்றோ, விண்வெளிச் செலவின் வழி-நிலா மண்டிலத்தைக் கண்டதை மட்டுமே வியக்கின்றனர். அவ்வியப்பு நமக்கும் உரியதே. ஆனால் அவ்வியத்தகு ஆற்றலுடைய நந்தமிழ்ச் சான்றோர்களை மறைத்தும் திரித்தும் ஏன் மறுக்க வேண்டும்?

இன்றைய அறிவியல் வளர்ச்சியாகிய கனியைப் பெற வித்திட்டவர்களே நமது முன்னோர்கள் தான் என்பதை இயைபுபடுத்தி டார்ப்பமோமாயின் இப்பேருண்மை நமக்குப் புலனாகும். ஆயின் இயைபுபடுத்தும் இயல்பு எங்ஙனம் என்பதை விளக்குவதே மாமகத் திருநாள்.

விண்வெளியிலுள்ள விண்மீன்கள் இருபத்தேழைப் பற்றி ஆய்ந்தனர் நம் பழந்தமிழ் அறிஞர்கள், அவற்றிற்கு புரவி, அடுப்பு, ஆரல் சகடு, மான்றலை, மூதிரை, கழை, கொடிறு, அரவு, கொடுநுகம், கணை, உத்தரம், கை, அறுவை, விளக்கு, முறம், பனை, துளங்கொளி, குருகு, முற்குளம், கடைக்குளம், முக்கோல், காக்கை, செக்கு, நாழி, முரசு, தோணி எனப் பெருந்தமிழில் பெயரிட்டு வழங்கினர். அவ்விண்மீன்களுள் ஒன்று கொடுநுகம் (மகம்). நடைமுறையில் அசுவினி முதல் இரேவதி முடிய உள்ளவை ஆகும் இவ்விண்மீன்கள்.

ஓரை (இராசி)யின் அடிப்படையில் தமிழ் மாதங்கள் மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம் எனப்பன்னிரண்டு. அம்மாதங்களுள் ஒன்று கும்பம்-மாசி. (நடைமுறையில் சித்திரை முதல் பங்குனி ஈறாக வழங்குவன இத்தமிழ் மாதங்கள் ஆகும்.)

மூதன்மை, இருமை, மும்மை, நான்மை, ஐம்மை, அறுமை, எழுமை, எண்மை, தொண்மை, பதின்மை, பதிற்றொருமை, பன்னிருமை, பதின்மும்மை, பதினான்மை, காருவா அல்லது வெள்ளுவா என உவாத் (திதி)களைப் பதினைந்தாகக் கண்டனர் நம் முன்னோர்கள். அவற்றுள் ஒன்று வெள்ளுவா. (பௌர்ணமி) அன்று முழுமதி நன்னாளாகும். (நடைமுறையில் பிரதமை முதல் அமாவாசை அல்லது பௌர்ணமி வரையுள்ளவை) (அமாவாசை - காருவா; பௌர்ணமி - வெள்ளுவா)



அருள்மிகு மங்களாம்பிகை



**அருள்மிகு கும்பேஸ்வரர் ஆலய இராஜகோபுரம்**

ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி என்னும் எழுவகைக் கோள்களையும் நமது முன்னோர்கள் ஆய்ந்து அறிந்து அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

பின்னர் ஞாயிறு-திங்கள் ஆகியவற்றின் சிறப்பையும் இணைத்து, (இராகு கேது ஆகியவற்றையும் சேர்த்து) கோள்கள் ஒன்பது என மரபினர் மிகுத்துக் காட்டினர்.

கோள்கள் ஏழுக்கும் உரிய ஓரை (வீடு) களாக ஞாயிறு-மடங்கல்; திங்கள்-கடகம்; செவ்வாய்-மேழம், நளி; அறிவன்-ஆடவை, கன்னி; வியாழன்-சிலை, மீனம்; வெள்ளி-விடை துலாம்; காரி-சுறவம், கும்பம் எனப் பன்னிரண்டு ஓரைகளையும் ஏழு கோள்களுக்கு அமைத்துக் காட்டியிருப்பதாலும், இராகு-கேது ஆகியவற்றிற்குத் தனித்தனி வீடுகள் தமக்கென இன்மையாலும் கோள்கள் ஏழெனும் உண்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.

மேலும், அவ்வேழு கோள்களின் உரிமை நாட்களாகவே, ஏழுகிழமைகளையும், நம் தமிழ்ச் சான்றோர்கள் அமைத்தனர். அவற்றுள் அறிவன் புதன் என்றும்; காரி சனி என்றும் வடமொழிப் பெயரில் இன்று வழக்கில் உள்ளன. ஆக, கோள்களுள் ஒன்று வியாழன்(குரு), வியாழனை தேவகுரு என்றும், வெள்ளியை அரக்கர் (அசுரர்) குரு என்றும் வழங்குவது கணித (சோதிட) நூலின் மரபு, வியாழன் ஓர் ராகியில் இயங்கும் காலம் ஓராண்டாதலின் அவருக்கு ஆண்டளப்பான் என்ற பெயரும் உண்டு.

இங்ஙனம், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே, நம் பழந்தமிழ் அறிஞர்கள் மண்வெளியில் வாழ்ந்த வண்ணமே-விண்வெளியில் தம் அறிவைச் செலுத்தி விண்மீன்கள் கோள்கள் பற்றிய ஆய்வினை நடத்தி, அவற்றின் இயல்புகளை உலகிற்கு அறிவித்த பேருண்மையை-மாமகத் திருநாள் அறிவித்து-தமிழன் அறிவியல் வளர்ச்சியின் முன்னோடி என்பதைப் புலப்படுத்தி, உலகிற்குப் பறை சாற்றுகின்றது.

எனவே, கோள்களில் ஒன்றும், தேவர்களின் குருவுமாகிய வியாழன் மடங்கல் ஓரை (சிம்மராசி)யில் இயங்க-அம்மடங்கல் ஓரைக்குரிய ஞாயிறு (சூரியன்) தன் மகன் காரி (சனி) யின் வீடுகளுள் ஒன்றும், தனக்கு ஏழாமிடமும் ஆகிய கும்பத்தில் இயங்க, கொடுநுகம் (மகம்) எனும் விண்மீனில், வெள்ளுவா முழுமதியன்று திங்கள் மடங்கல் ஓரையிலுள்ள வியாழனுடன் சேர திங்களும், வியாழனும்-ஞாயிற்றைப் பார்க்க, ஞாயிறு இவ்விருவரையும் பார்க்க இங்ஙனம் முழுப்பார்வையுடன் கூடிய காலமே, ''மாமகப் புனித காலம்'' ஆகும். இவ்வாறு ஏற்படும் காலம் ஆண்டளப்பானின் இயக்க அடிப்படையில் பன்னீராண்டுகட்கு ஒருமுறையாகும்.

மாதந்தோறும் 27 நாட்களுக்கொருமுறை மகநட்சத்திரம் (கொடுநுகம்) வரும். அதுமாதக் கொடுநுகம் எனப்படும். ஆண்டுதோறும் கும்ப (மாசி) மாதத்தில் வரும் கொடுநுகம் கும்பக்கொடுநுகம் (மாசிமகம்) எனப்படும். இங்ஙனம் பன்னீராண்கட்கொருமுறை வரும் கும்ப கொடுநுகம் மாக்கொடுநுகம் (மகாமகம்) எனப்படும்.

ஒவ்வொராண்டும் கும்பக்கொடுநுக (மாசிமக) நாளன்று, சிவபெருமான் அன்பர்கட்கும், அடியார்கட்கும் தூநீர் கொடுத்தருளுவார். அது கும்பக் கொடுநுகத்தூநீர் எனப்படும். இங்ஙனம் பன்னீராண்டுகட்கு ஒருமுறை அருளும் தூநீர், மாக்கொடுநுகத் தூநீர் (மாசிமகத் தீர்த்தம்) எனப்படும்.

பாரதநாடு என்னும் நாவலந் தீவிலுள்ள சிறந்தஆறுகளாகிய கங்கை, யமுனை, சரசுவதி காவிரி, கோதாவரி, நர்மதை, மகாநதி, பாலாறு சரயு ஆகிய ஒன்பது ஆறுகளிலும் மக்கள் நீராடி தம்முடைய பாவங்களை எல்லாம் போக்கிக் கழுவாய்த் தேடிக் கொள்கின்றனர். மக்களின் பாவங்கள் அவ்வாறுகளிலுள்ள புனித நீரால் கழுவப்பட்டு மக்கள் தூயவர்களாகின்றனர்.

ஆயின் மக்கள் நாடோறும் நீராடுவதலால் மக்களைத் தூயவர்களாக்கி அவர்களின் பாவங்

**(இதன் தொடர்ச்சி 28-ம் பக்கம் பார்க்க)**

# படைக்கலாமா? படையல்

ஞானச்சேரி ஞானிகள், வேளச்சேரி ஆசிரமம், வேளச்சேரி.

ஆண்டவனை வணங்கி வழிபாடு செய்கின்றவர்கள் நாட்டிலே பல பேர் இருக்கிறார்கள். இறைவனை வணங்கும்போது மனிதன் சிந்திக்க வேண்டாம். காசுக்கோ வயிற்றுப் பிழைப்பிற்கோ அல்லது அடிமைத்தனத்திற்கோ ஒரு மனிதன் மற்றொரு மனிதனை வணங்கும்பொழுதே சிந்திக்க வேண்டும். இறைவனின் முன் கேலிக்கும் அவமரியாதைக்கும் இடமில்லை. ஒன்று பக்தி என்ற பெரிய விருப்பம் வர வாய்ப்பு உண்டு. இல்லையேல் வாய்ப்பு இல்லை. இறைவனைப் பற்றி சிந்திக்க முடியாத இருபதாவது நூற்றாண்டிற்கு இதுவே உபதேசம்.

வெட்கம்..இன்றைய மக்களை, கடவுளை வணங்க திருநீறு இட்டுக் கொள்ள, நெற்றியில் நாமம் போட தடுக்கிறது. தடுக்கலாம். வேறு எவரும் நம்மைத் தடுக்கவில்லை என்பதை உணர வேண்டும். வெட்கம் நமது உண்மையான உபதேசத்தைக் கேட்காது. வெட்கம் விடை பெற்றால் அனுபவங்களெல்லாம் ஒழுக்கங்களாகிவிடும். ஒழுக்கங்கள் யாவும் அனுஷ்டானங்கள் என்ற அனுபவம் ஆகிவிடும். தொழிலாளி தொழில் செய்யும்பொழுது கடைபிடிக்கின்ற உண்மைகளே தொழிலுக்கு வேண்டும். அதுபோல கடவுள் துறைக்கு திருநீறும் திருமண்காப்பும் வேண்டும். இதனால் வெட்கத்தை விட்ட மனிதனே பக்தனாகிறான். பக்தி செய்கிறான்.

மேலே சொன்ன கருத்தை மனதில் கொள். சிறிது சந்தேகத்துடன் ஒரு மனிதனைப் பார்த்தால்கூட அம்மனிதன் உன்னருகே வந்து உன்னை விசாரிப்பான். அதுபோல சிறிது இறைவன் மனிதனுக்கு நன்மையே செய்கிறான் தீமை செய்வதில்லை. இறைவனைக்கும்பிடாமலிருந்தாலும் பலன் உண்டு. வானம் மழையை மனிதன் பொருட்படுத்தினாலும் பொருட்படுத்தாவிட்டாலும் அது எல்லா இடத்திலும் பெய்துவிட்டே செல்கிறது. பாலைவனத்தையும் அது ஒதுக்குவதில்லை. உயர்ந்த மலை,சமவெளி இவைகளுக்கு மழை ஒரு வரப்பிரசாதம்.

இது போன்றவனே ஆண்டவன். அவன் தனது உதவியைச் செய்து கொண்டிருக்கிறான். பலர் அருளைப் பெற்று ஞானியாகிறார்கள். சிலர் இறைவனைச் சிந்தித்து உயருகிறார்கள். வேறு சிலர் கவனிக்காமலும் இருக்கிறார்கள். இக்கருத்து கலியுகத்திற்கு மற்றொரு உபதேசம்.

மழையை உணருதல் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பதே விவசாயம். அது போல ஆண்டவனை வணங்குதல் என்பது இறைவனைப் பற்றிய அறிவு அல்லது தெளிவு எனலாம். இல்லையேல் ஞானம் எனலாம். பயனடைய முயலு. போதும்.

கடவுளை வணங்குவது தவறில்லை என்பதைத் தெரிந்து கொண்ட மனிதன் இனி வழிபாடு செய்வதும் தவறில்லை என்பதை உணராமல் இருக்கக்கூடாது. உணர்ந்த கருத்துக்களில் அபிப்பிராய பேதம் வருவது தவறில்லையா? இது போல வழிபாடு என்ற பூசையைப் பற்றி மனிதன் நினைக்க வேண்டும். பிறகே பூஜை செய்வான். இது மற்றொரு உபதேசம் என்பதை உணருங்கள். கடவுளுக்கு இமயமலையை உதாரணமாகக் கொள். பிறகு வழிபாடு என்றால் என்ன என்று புரியும். இமயமலையை கவனிக்காமல் காலம் தள்ளுகின்ற மனிதர்கள் காலம் தள்ளுவதற்கு பிறர் எழுதிய பூகோளத்தைப் படிக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு கல்வி அளந்தே கூலி போடுகிறது. அளந்ததைப் பெறாமல் தானே செல்வம் சேர்க்கின்ற பெருமை மனிதனுக்கு வேண்டும். இதுபோல் மனிதன் அவனாகவே வழிபாட்டை உணரவேண்டும். பிறர் சொல்லி பூஜை செய்வது நமக்கு எதற்கு? நாமே வழிபாடு செய்வோம்.

இவைகளைப் போன்றதே கடவுள் வணக்கம், பூஜை இவைகள். இதை அறிந்த மனிதன் பக்திக்காக கடவுளுக்கு தான் உண்ணும் பொருள்களைப் படைக்கிறான், நிவேதனம் செய்கிறான். இது செய்தால் என்ன பலன் என்று சிந்தித்தால் அனைவரும் கலங்குவார்கள். பதில் சொன்னால் நீங்கள் மேதை அல்லது பக்தன் அல்லது சிந்தனையாளன். இல்லையேல் எல்லாம் எனக்கே என்று அடக்கத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.


இன்றைய உலகில் நாமும் உண்டு, பிறரும் உண்ணவேண்டும் என்ற குணம் எவரிடமும் இல்லை. பகுத்துண்டு வாழுதல் என்ற கருத்தின்படி பங்கு போட்டுக் கொண்டு உண்ணும் முறை எங்குமில்லை. இதனால் ஆண்டவன் மனிதனிடம் படையல் கேட்டான். நிவேதனம் கேட்டான். வெட்கப்பட்டேன். ஆண்டவனுக்குப் படைத்தேன். அதைப் பிறருக்கு கொடுத்து உண்டேன்.

இதுவே படையலின் கதை.



# மகாமக மகத்துவம்

சென்ற இதழ் தொடர்ச்சி...




தவத்திரு டாக்டர் சாயிமாதா

**சிவபிருந்தா தேவி**

*திலகவதியார் ஆதீனம், புதுக்கோட்டை*


வந்தவர்கள் அனைவரையும் பிரம்மா அழைத்துக் கொண்டு ஊர்வலம் வந்து நல்ல சுபமுகூர்த்தத்தில் கும்பேசுவரர் ஆலயத்திற்குள் பிரவேசித்துத் துவாரோஹணம் செய்தார்.

இதுதான் பூலோக கைலாசமோ என அனைவரும் எண்ணிடும் வகையில், பல் லக்குகள், யானைகள், குதிரைகள், இன்னும் பல வாகனாதிகளுடன் பரமேசுவரன், அம் பாள் சகிதம் இரதத்தில் ஏறி பிரதட்சணம் வந்ததைக் கண்டோர் அனைவரும் தம்மைத் சிறந்தவராய் இக்காட்சிக்கு அருகதை உடையோராய், தாமே தவத்தில் ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்தவராய் எண்ணிப் பூரித்துப் போயினர்.

உற்சவ ஆரம்பத்தில் முதன் முதலாகச் சிறப்பிக்க வேண்டியது மகாமக தீர்த்தமேயாகும். இந்த மகாதீர்த்தம் எனப்படுவதே மகாமகக் குளமாகும். இந்த உற்சவத்தில் இக்குளம் மிகவும் சிறப்புடையது. இதற்குப் பல பவித்திரங்கள் உண்டு என்பதை உலகோர்க்கு உணர்த்த வேண்டி, பிரம்மதேவர் துவக்கத்தில் இக்குளத்தைச் செப்பனிட்டு அலங்காரம் செய்தார்.

குளப்படித்துறைகளைச் செம்மையாய்க் கட்டியும் மண்டபங்களைச் சுற்றிலும் அமைத்தும், கைப்பிடிச்சுவர்களைப் பாங்குற எழுப்பியும், குளத்தைச் சுற்றிலும் வாழைகள் நாட்டித் தோரணங்கள் தொங்க, மாவிலைச் சரங்கள் காற்றில் அசைந்து ஆடப் பாக்கு பரங்கள், மந்தகாசத்துடன நகைக்க, அந்த மகா தீர்த்தத்தை அலங்காரம் செய்தார்.

இந்த மகாமகக் குளத்தில் சக்திகள் நிறைந்த ஒன்பது நதிகள் ஒன்று கலந்திருப்பதாக ஐதீகம், அவை: கங்கை, காவிரி, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, மகாநதி, பாலாறு, சரயு, இவ்வொன்பதும் நன்றாகக் கலந்து இம் மகாமகக் குளத்தைத் திருக்குளமாக்குகின்றன.

''கங்கை யென்றுலகெலாங்
கைதொழக் தரும் பங்கை''

என்று வில்லிப்புத்தூர் ஆழ்வார் போற்றும் கங்கையும் இம்மகாமகக் குளத்திற்கு மகத்துவம் சேர்க்கிறாள், தம்மை அண்டிவந்தோருடைய மனத்துயரையும் சரீர அழுக்கையும் நீக்கும் இந்த ஒன்பது நதிக் கன்னியரும் ஒரு நாள் பார்வதியோடு பரமசிவன் கொலுவிருக்கும் கயிலையங்கிரிக்குச் சென்றார்கள்.

எண்ணற்ற ஜீவர்கள் தங்கள் உள்ளமாசினையும் உடல் அழுக்கையும் நீக்கும் பொருட்டு நீராடுவதால் அந்தமாசும மருவும் தங்களிடம் சேர்ந்துவிடுவதால வரும் பாவங்களைப் போக்கிக் கொள்வது எப்படி?'' எனப் பரமசிவனாரிடம் வேண்டினார்கள். மன்றாடினார்கள். அரனின் சரணங்களில் வீழ்ந்து பணிந்து, ''சம்போ, மகாதேவா, சங்கரா'' எனத் துதித்தார்கள்.

''கண்டார் மனத்தைக் களிகொள்ளச் செய்யும் கன்னிகாள்! நீங்கள் கவலையுற வேண்டாம். உங்களது பாவங்கள் ஒழிந்து போவதற்கு ஓர் உபாயம் சொல்கிறேன். இந்த தினத்திலே நீங்கள் புறப்பட்டு, எமக்கும் மகாவிஷ்ணுவிற்கும் விருப்பமான கும்பகோணத்திற்குச் செல்லுங்கள், மாசி மாதம் பௌணர்மி திதியன்று, பகலில், விருஷப லக்கினத்தில், கும்பேசுவரருடைய ஆலயத்தின் தென்கிழக்கில் பரப்பும்மத்தின் கட்டளையால் அமிருத தாரையால் நிரம்பப்பெற்ற சுத்த ஸ்படிகமான தண்ணீர் கொண்ட தடாகம் ஒன்றிருக்கிறது. அதற்கு, ''மகாமகக்குளம்'' என்ற திருநாமம் உண்டு. அக்குளத்து நீரில் பக்தியுடன் சிரத்தை



யுடன் நீராடுங்கள், பகவானைப் போற்றுங்கள் உங்களிடம் அணுவளவும் பாவம் சேராது. புண்ணியம் புகும். அது முதல் உங்களுக்குச் சகல மகிமைகளும், அருமை பெருமைகளும் சேரும்'' என்றருளினார்.

இதனைக் கேட்ட கன்னியர்கள் ஒன்பது பேர்களும், ''சுவாமி! எங்களுக்குக் கும்ப கோணமும் தெரியாது. கும்பலிங்கமும் தெரியாது. தங்களுடைய திருவடிகளையே நாங்கள் அறிவோம். சரணம் மகாதேவா; சம்போ மகாதேவா சங்கரா மகாதேவா!'' எனத் தொழுதனர்.

''நன்று நங்கையர்களே! நீங்கள் எல்லோரும் காசி சேத்திரம் செல்லுங்கள். அங்கு நாம் வந்து, விசுவநாதன் என்ற பெயரோடு உங்களை அழைத்துக் கொண்டு கும்பகோணம் செல்லுகிறேன் என்று சொல்ல ஒன்பது கன்னியரும் காசிசேத்திரம் சென்று காத்திருந்தனர்.

வாக்களித்தபடியே சர்வேசுவரனாகிய, விசுவம் என்ற உலகிற்கு நாதனாகிய விசுவநாதன், காசிப்பதி சென்று நவகன்னியரையும் அழைத்துக் கொண்டு ஏனைய சிவ கணங்களையும் சேர்த்துக் கொண்டு கும்பகோணம் வந்து சேர்ந்தார்.

இவ்வாறாக ஈசுவரன் வருகின்ற பெருமுழக்கத்தைக் கண்டு, கிழக்குமுகமாய் வீற்றிருந்த கடபடேலசுவரர் அம்பிகை உடனாக மேற்கு பக்கம் திரும்பினார். அபிமுகேசுவரர் தம்முடைய சுதாவல்லி அம்பிகையோடு தெற்கு முகமாய்த் திரும்பினார். மற்றுமிருந்த தேவர்கள் பிரமிப்பும் ஆச்சர்யமும் அடைந்தனர்.

''அங்கு இவர்கள் இம்மாதிரி மாறுவதற்கு யாது காரணம்?'' என ஒன்பது கன்னியரும் எல்லாம் வல்ல இறைவனைக் கேட்டனர். அதற்குப் பரமசிவம், ''புண்ணிய தீர்த்தங்களே! அவர்களுக்கும் நமக்கும் ஒருபேதமில்லை. சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய இம்மூன்றும் ஒருங்கே அமைந்த ஒரு மூர்த்தியே அனைத்துமாம். பல பேர்களுக்குப் பலநாம ரூபங்களோடு தென்படுவதும் நாம் தாம். உலகானுபவ நம்பிக்கையை ஒட்டி ஒரு வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்விடம் ஒருவிதமாகவும் மற்றோரிடம் மற்றோரு விதமாகவும் பக்தகோடிகளின் கண்களுக்கு நாம் தென்பட்டாலும் ஒன்றுதான் அனைத்தும். ஏகன்தான் அநேகன். மேலும் நாம் எல்லோரும் புறப்பட்டு வரும்போது பிரம்பாண்டத்தைப் பிளக்கும்படியான பெருஞ்சப்தத்தைக் கேட்டவுடனே அவர்கள் திரும்பியதாகுமேயன்றி வேறொன்றுமில்லை'' என்றார்.

நவதீர்த்தங்களும் இறைவனைப் பணிந்து ''எங்களுடைய பாவ அழுக்குகளை அகற்றுவ

தோடு இன்றுமுதல் தங்களை அபிமுகேசுவரர் எனறழைத்துத் துதிக்க அனுமதி அருளவேண்டு மென இறைஞ்சினர்

பிறகு அனைவரும் மகாமகக் குளத்தைச் சுற்றி வரப் புறப்பட்டார்கள். வரும்போது ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு கணம் நின்று குளத்தை வலம் வந்தார்கள். குளத்தின் நடுவில் நின்று பார்க்கும்போது வடமேற்கு முகமாக இவ்விடம் தெரியும். இவ்விடத்திலே கன்னியர்கள் நின்று விட்டார்கள். விசுவநாதரும் மேற்கு பாகத்தில் ''விசுவலிங்கம்'' என்று பெயர் கொண்டு தங்கினார்.

நவகன்னியர்களான புண்ணிய தீர்த்தங்கள் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் வந்திருப்பதை அறிந்த பிரம்மா பார்த்து மகிழ்ந்து இதுவும் திருவருளே எனச் சிந்தித்து வாத்யகோஷங்களுடன் மகா மகோற்சவத்தைச் சங்கற்பம் செய்யத் துவங்கினார்.

சுத்த ஸ்படிகமான நீர் நிரம்பிய குளத்திற்கு மகாமகக் குளம் என்ற பெயர் பொதுப் படையாக வழங்கினாலும் மேலும் ஐந்து பெயர்கள் இக்குளத்திற்கு உண்டு. இந்த ஒவ்வொரு பெயருக்கும் தனித்தனியே மகிமையும் பெருமையும் இருப்பதனால் இந்த ஐந்தில் எந்தப் பெயரைச் சொன்னாலும் புண்ணியம் உண்டெனப் பௌராணிகர் சொல்லுகிறார்.

1. மாக சரோவரம்
2. கன்யா தீர்த்தம்
3. பாபா பநோதனம்
4. சுதா தீர்த்தம்
5. பகு தீர்த்தம்

இந்த ஐந்து தீர்த்தங்களும் மகாமக தீர்த்தத்திற்கே குறிப்பாகப் போவது பற்றி ஒவ்வொரு தீர்த்தத்திற்கும் உள்ள அர்த்தம் அற்புதமானது.

மாக சரோவரம்: ''அக'' என்றால் பாபம்; மா என்பதற்கு 'இல்லை' என்று பொருள். எனவே இந்தக் குளத்தில் நீராடியவர்களுக்குப் பாவம் என்பதே கிடையாது. 'சரோவரம்' என்றால் சிறந்த குளம் என்று அர்த்தம்.

கன்யா தீர்த்தம் : 'மகாள்' என்ற பெயருடைய கன்னியர் இக்குளத்தில் வசிக்கிறார்கள். இந்த மகாள் என்ற கன்னியரோடு நவநதிகளும் (கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை கோதாவரி, காவேரி, மகாநதி, பாலாறு சரயூ) சேர்ந்து பாவங்களைப் போக்குவதால் வெகு தொலைவிலிருந்தும் யாத்ரீகர்கள் நீராட வருகிறார்கள்.

பாப பநோதனம்: கொலை, கொள்ளை நரசோரம், பிரம்மஹத்தி முதலான பெரிய பெரிய பாவங்களுக்குப் பரிகாரம் கிடையாதெனப் புலரும் பகர்ந்திருந்தாலும் பிரம்மாவினால் துவங்கப்பெற்றுப் பரமசிவனே தீர்த்தாடனஞ் செய்த இம்மகாதீர்த்தமே எல்லாப் பாவங்களையும் போக்கும் பாபா பநோதன தீர்த்தமாக விளங்குகிறது.

சுதா தீர்த்தம்: சிருஷ்டி பீஜ கடத்தின் கோணமானது, சிவபெருமானால் பிளக்கப் பட்டபோது கடம் விரிந்து அதன்பின வழியாக அமிர்தம் பூமியில் பெருகி வந்து தாரையாக ஓடி இத்தடாகத்தில் விழுந்தது. ஆதலால் இதற்கு சுதா தீர்த்தம் என்ற பெயர் வந்தது.

பகு தீர்த்தம் : அநேக புண்ணிய தீர்த்தங்கள் இத்திருக்குளத்தில் வந்து சேர்ந்திருப்பதால் பகுதீர்த்தம் (அநேக தீர்த்தம்) என்ற பெயருடன் பிரகாசிக்கின்றது.

இந்தக் குளத்தில் 66 கோடி தீர்த்தங்கள் அடங்கியிருப்பதாக ஐதிகம்.

கிழக்கில் அபிமுகேசுவரர் சந்நிதானத்தில் தோன்றுவது இந்திர தீர்த்தம். ஆக்னேய மூலையில் அக்னி தீர்த்தம். நேர்தெற்கில் உள்ளது யம தீர்த்தம். தென் மேற்கு மூலையில் ராட்சச தீர்த்தம். மேற்கு திக்கல் வருண தீர்த்தமும், தேவ தீர்த்தமும். வடமேற்கில் வாயு தீர்த்தம். வடக்கில் பிரம்ம தீர்த்தமும், குபேர தீர்த்தமும், வடகிழக்கில் ஈசான தீர்த்தம். வாயு தீர்த்தத்திற்கும் பிரம்ம தீர்த்தத்திற்கும் மத்தியில் நிற்பதே கங்கா தீர்த்தமாகும். பிரம்ம தீர்த்தத்திற்கும் குபேர தீர்த்தத்திற்கும் மத்தியில் யமுனா தீர்த்தம். இவ்வாறுள்ள தீர்த்தங்கள் இருபது என்று சொல்லுகிறார்கள்.

பஞ்சமகா பாதகங்களைத் தீர்த்துக் கொள்வதற்குப் பிரம்மனது படைப்பில்இப்படியொரு அபூர்வ தீர்த்தம். இப்பூவுலகில் நாம் பெற்றிருப்பது பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தைச் கூட்டிக் கொள்ள வாய்ப்பாகும் என்னும்போது, ''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே'' என எண்ணி மகிழ வைக்கின்றது.

நீண்ட நாட்களாக ருதுவாகாமல் இருக்கும் மடந்தையரும், கணவனால் கொடுமை படுத்தப்பட்ட பெண்களும், ரோகமுள்ள பெண்களும், ரோகமுள்ள கணவனை அடைந்த பெண்களும் இப்புண்ணிய தீர்த்தத்தில் மகாமகக் குளத்தில் நீராடினால், அவர்களது மனக் குறை நீங்கி விருப்பம் நிறைவேறும் என்பது அருளாளர்கள் கண்ட அனுபவமாகும்.

இத்தீர்த்தத்தில் நீராடும் பெண்கள் குங்குமம், கண்ணாடி, புஷ்பம், வெற்றிலை பாக்கு, மஞ்சள் இவைகளைத் தம் மடியில் கட்டிக் கொண்டு நீராடுவார்கள். கணவனும், மனைவியும ஒருங்கே ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு தீர்த்தமாடுவதும் உண்டு.

''கும்பகோணமே கோணம்
குயவன இட்டதே பாண்டம்''

என்ற பழமொழி வேடிக்கையாகத் தோன்றினாலும், அதனை நாடிக் கைதொழுதால் கும்பகோண சேத்திரமகத்துவமும், மகாமகதீர்த்த மகத்துவமும் பிரம்மா இட்ட பாண்டம்-குடத்தின் மகத்துவமும் நாம் புரிந்து தெரிந்து உணர்ந்து மதித்துத் துதித்து நடந்து நாமும் மகத்துவம் பெற்று மகத்துக்களாவோம்.

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

[ 48 ]

சூரபன்மன் ஒரு மாயமந்திரம் ஜபித்து விண்ணும் மண்ணுமாய் பெரியதோர் இருள் வடிவத்தை எடுத்தான். இவ்வடிவத்தைக் கண்டு கதிரவனும் மயங்கினான். தேவர்கள் ''இது சூரபன்மன் செய்துள்ள மாயம்'' என்று கலங்கினார்கள். மாய வடிவத்துள் மறைந்து நின்று ஆரவாரம் செய்த சூரபன்மன் பல தலைகளும். அளவற்ற கரங்களும் கூடிய உருவத்துடன் தேவர்களைக் கொல்லப் பாய்ந்து சென்றான். தேவர்கள், அந்தக்கனாந்தகாரத்தில் திக்குத்திசை தெரியாமல் சிதறி ஓடினார்கள். அரற்றினார்கள்; அலறினார்கள். இருளில் தேவர்களின் குரல் கேட்டது. முகம் தெரியவில்லை.

''நண்ணினர்க் கினியாய் ஓலம்! ஞானநா
யகனே ஓலம்!
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே
ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும்
படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம்!
ஓலம்!

''தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே
ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா
ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய்
ஓலம்
மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம்! ஓலம்!''

சுவாமி! சூரபன்மன் இருள் உருவில் மறைந்து வந்து எங்களைக் கொல்ல முயலுகின்றான். அவனிடமிருந்து தப்பியோடவும் நாங்கள் வலிமையற்றவர்களாக இருக்கிறோம். சுவாமி இனி நாங்கள் எங்கே உய்வோம்? கணப்பொழுதும் தாமதம் செய்யாது அவனைக் கொன்று எங்களைக் காத்தருளும்'' என்று தேவர்கள் வேண்டிக்கொண்டனர். ''என் ஐயனே இனியும் தாமதித்தலாகாது. சூரனை இப்போதே கொன்று எங்களை ஆண்டருள வேண்டும்'' என்று மயிலுருக் கொண்டு முருகவேளைத் தாங்கி நின்ற மகபதியும் முறையிட்டுக் கொண்டான்.

முருகக் கடவுள் தேவர்களின் முறையீட்டையும், சூரபன்மன் மாயையின் ஆற்றலையும் திருவுள்ளத்தில் எண்ணினார். தருணம் வாய்த்துவிட்டது என்று மனம் கொண்டு விட்டார் முருகப் பெருமானார். தம்முடைய திருக்கரத்தில் இருக்கும் வேற்படையை நோக்கி, ''விரைவில் சூரபன்மனின் மார்பைப் பிளந்து வருவாய்'' என்று மங்கல ஆக்ஞையிட்டு ஏவினார்.

ஆறுமுகப் பெருமான் ஏவிய வேற்படை ஆயிரங்கோடி சூரியர்களைப் போல் ஒளி விட்டுத் தீ ஜ்வாலைகளை உமிழ்ந்து சென்று சூரபன்மனின் இருள் வடிவத்தை அழித்தது. தன் மாயை அழிந்ததையும் வேற்படை எதிரே வருவதையும் நோக்கிய சூரபன்மன், ''அழியாத மேன்மையுடைய என்னை இந்தப் பாலகன் ஏவிய வேற்படை என்ன செய்யும்?' என்று ஏளனமாகச் சிரித்தான். மிகுந்த கோபம் கொண்டு ''நிலவுலகையும், திக்குகளையும், மேல் கீழ் உலகங்களையும் அழிப்பேன்'' என்று ஆரவாரித்தான். உடனே அவன் கடலின் நடுவில் சென்று அக்கினிபோன்ற தளிர்களையும். புகை போன்ற இலைகளையும், மரகதம் போன்ற காய்களையும், மாணிக்கமணி போன்ற பழங்களையும், முகில்கள் போன்ற கிளைகளையும் ஈன்று அண்டகூடம் வரையிலும் பரவிய பெரியதொரு தருவாக உயர்ந்து நின்றான். திகந்தம் வரை சிறு கிளைகளை நீட்டியும், பூமியைத் தாங்கும் ஆதிகூர்மம் வரை தேர்களை ஓட்டியும், மண்ணிலும் விண்ணிலும் நிழலைப் பரப்பினான். சூரிய சந்திரர்களும் அட்ட திக்குப் பாலகர்களும், தேவர்களும் அஞ்சும்படியாக இலக்கம் யோசனை அகன்று நின்ற சூரன் என்ற மாபெரும் மாமரம் மேரு மலை அசைந்தாற்போல் கிளைகளை அசைத்தது. அந்த அசைவினால் நிலவுலகங்கள் இடிந்தன; தேவர்கள் அஞ்சி ஓடிக் கயிலை மலையிலும் மேருகிரியிலும் புகுந்தனர்.

ஆலகால நஞ்சையுண்ட சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணில் உள்ள நெருப்பினால் அமைத்து, அவருடைய இடக்கரத்திலுள்ள மழுவில் தோய்த்தது போன்ற அவ்வேற்படை ஆயிரங்கோடி சூரிய ஒளியுடன் அக்கினி மழை பொழிந்து கொண்டு சென்று ஆணவமல வடிவமாகிய சூரனாகிய மாமரத்தைத் துணித்தது.

''விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல்
உறுதிப் பாணி
இடம்பிடித் திட்டதீயில் தோய்த்துமுன்
இயற்றியன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு
செலவின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல்தடிந்த
தன்றே''.

சூரவிருட்சத்தைவேல் அழித்தாலும் சூரபன்மன் அழியவில்லை. மரவடிவம் ஒழிந்த

பின்னரும் அமரரின் எதிரியானபழைய வடிவமும், வச்சிர சரீரமும் பெற்றான் சூரபன்மன். ''இனி வேலையும், வேலை எய்தவனையும் வெல்வேன்' என்று வெஞ்சினம் கூறிவாளை உருவி எதிர்த்துச்சீறினான்.

சூரபன்மன் ஆறுமுகப் பெருமானை நேருக்கு நேராக நெருங்கி எதிர்த்துத் தன் அழிவைத் தேடிக் கொண்டான். சரவணபவன் விடுத்த சக்தி ஆயுதம் சூரனுடைய மார்பைப் பிளந்தது. உடம்பை இரு துண்டாக்கிக்கடலில் வீழ்த்தியது. வேதங்கள் வாழ்த்தின. தேவர்கள் பூமழை சொரிந்தனர். வேற்படை அப்பூமழை நடுவிற் பாய்ந்து சென்று அனல் வடிவம் மாறி வேதகங்கையில் மூழ்கிப் புனிதம் பெற்று, அங்கிருந்து திரும்பிச் செவ்வேளின் செங்கரத்தில் வந்து அமர்ந்தது.

''புங்கவர் வழுதிச் சிந்தும் பூமழை இடையின் ஏகி
அங்கியின் வடிவம் நீங்கி அருளுருக் கொண்டு வான்தோய்
கங்கையில் படிந்து மீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள்தம் பெருமான் செங்கை எய்திவீற் றிருந்த தவ்வேல்''

மார்பு பிளந்து உடல் இரு துண்டான பின்னரும் கூட சூரபன்மன் சாகவில்லை.

''கடற்ச லந்தனி லேயொளி சூரனை
உடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில்
விடும்வேலா.''
—திருப்புகழ்.

சூரபன்மனின் வச்சிர யாக்கை பிளந்தவுடனே ஒரு பாதி சேவலாகவும் மற்றொரு பாதி மயிலாகவும் ஆயின. அந்த நிலையிலும் சூரபன்மன் விடவில்லை. மாணிக்க மரகத மலையொன்று கால்களையும் சிறகுகளையும் பெற்றுப் பறந்து செல்வதுபோல ஆறுமுக வள்ளலை எதிர்த்துப் போர் செய்யும் செருக்குடன் வந்தான்.

''தாவடி நெடுவேல் மீளத் தற்பரன் வரத்தால் வீடா
மேவலன் எழுந்து மீட்டும் மெய்பகிர் இரண்டு கூறும்
சேவலும் மயிலு மாகிச் சினங்கொடு தேவர் சேனை
காவலன் தன்னை நாடி அமர்தொழில் கருதி வந்தான்''.

சூரபன்மனின் ஒரு பாதி 'நான்' என்கிற அகங்காரம். மற்றொரு பாதி 'எனது' என்கிற மமகாரம். இவ்விரு பாதிகளின் வடிவான மயிலும் சேவலுமாகிய சூரபன்மன் முருகவேளை எதிர்த்து வருவதைக் கண்ட தேவர்கள் அஞ்சினர். ஆறுமுகக் கடவுள் சூரபன்மன் மீது அருள் நோக்கம் செய்தார்.

மயக்கமுடைய பட்சிகள் வடிவு கொண்டு மரகத மலைபோலவும், மாணிக்க மலைபோலவும் வந்த சூரபன்மன் எம்பெருமான் திருவருள் பொழிகின்ற திருக்கணோக்கஞ் செய்ய, அவன் பகைமை நீங்கி தெளிந்த மனத்தையடைந்தவனாகி சிவஞானிகள் பார்வையால் இரும்பு பொன்னாகுந் தன்மைபோல் அமைதியுற்று நின்றான்.

''மருள்கெழு புள்ளேபோல வந்திடு சூரன் எந்தை
அருள்கெழு நாட்டஞ் சேர்ந்த ஆங்கவன் இகலை நீங்கித்
தெருள்கெழு மனத்த னாகி நின்றனன் சிறந்தார் நோக்கால்
இருள்கெழு கரும்பொன் செம்பொன் ஆகிய இயற்கை யேபோல்''.

''தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''.

''சேறு படிந்த உடம்புடைய ஒருவன் நீரிற் படிவனாயின் அவன் உடம்பு தூய்மையுறும். அதுபோல், அகத்தில் ஆணவமலச்சேறுடையவர்களும் ஞான தேசிகராகிய எந்தை கந்தவேள் திருமுன்னுற்றால் ஆணவச் சேறு நீங்கித் தூயவராகி மேலைத் தொல்கதியடையவர். இதனை ஆராய வேண்டா; சூரபன்மனே போதிய சான்று'' என்கின்றார். கச்சியப்ப சிவாச்சாரியர். கொடியவனாகிய சூரபன்மன் நெடிது போர் செய்து எல்லையில்லாத திருவருளுக்கு ஆளானான்.

இப்பொழுது கந்தவேள் தமது திருவருளால் ஞானம் பெற்ற கோழியை நோக்கி, ''நீ நமது தேரில் கொடியாக இருந்து கூவுவாய்'' என்று பணிந்தருளினார். அவ்வாறே கோழி அவர் தேரில் ஏறிக் கொடியாக நின்று கம்பீரமாகக் கூவியது. பெருமான் இந்திரனாகிய மயிலினின்றும் இறங்கி சூரபன்மனாகிய மயிலின் மீது ஏறி உலகெங்கணும் பவனிவருவாராயினார்.

'இந்திரனை ரட்சிக்கவே தோன்றியவர் கந்தன்; சூரனைச் சிட்சிக்கவே தோன்றியவர் கந்தன். அவ்வாறிருந்தும் அவர் இந்திரன். சூரன் இருவர்க்கும் ஒரு போல் தம் வாகனமாயிருக்கும் அந்தஸ்து தந்த அருமையைப் பாருங்கள். கல்லார்க்கும், கற்றவர்க்கும், பொல்லார்க்கும் நல்லவர்க்கும் ஒரே பொதுவான பாரபட்சமற்ற பரங்கருணை புரிபவரன்றோ பரமன்?

சூரனாயிருந்த மயில், சுவாமியைத் தாங்கிய பெருமையில் உலகெங்கும் சுற்றி மீண்டும் வீரமகேந்திரபுரியின் செருக்களத்தை அடைந்தது. எதிரியாக இருந்த சூரன் இன்று மயூரமாகி முருகனைத் தாங்கியதும், குக்குடமாகி குகனது ஜயக்கொடியாகத் திகழ்ந்ததையும் சுவாமினுடைய பேரருளின் எல்லை என்றே கூற வேண்டும்? அவனுக்கு இந்தப் பெரும் பதவி தந்ததால், யாருடைய துயர்



தீரும் பொருட்டு ஐயன் அவதரித்தாரோ அந்த இந்திரனை வாகனப் பதவியிலிருந்துநீக்கினார்.

முன்பு மயில் உருவாயும், சேவல் உருவாயும் நின்ற இந்திரனையும் அக்கினியையும் நோக்கி, பழைய வடிவுகொள்ளும்படி அருளிச் செய்தார் ஆறுமுகசுவாமி. அவர்கள் பழைய உருப்பெற்று, இடைக்காலத்தில் உற்ற தொல்லை எல்லாம் நீங்கி, எல்லையில்லா தான் இணையடி தொழுது துதித்து நின்றார்கள்.

சுப்பிரமணியர் அவதாரம் செய்தது சூர சம்ஹாரத்துக்காக அல்ல. இந்திராணியின் மாங்கல்யத்தை ரட்சிக்க வந்தார். ஆகவே, ''கந்தவேள் கருணை'' படித்த பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாக இருப்பார்கள். திருமாங் கல்யத்தை ரட்சிக்க வந்த தெய்வம் முருகன் சூரபன்மனுக்கு வேறு வடிவம் தந்து இந்திரனுக்கு உயிரும் தந்த தெய்வம் முருகன்.

அகந்தை நீங்கியபின், சேவலும் மயிலுமாக சூரபன்மன் மீது கருணை காட்டிய கந்தவேள், மயிலை ஊர்தியாகக் கொண்டு ஆரோகணித்தருளினார்.

அடியார்களுக்கு அருள் புரிவதற்காக மயில் மீது தோன்றியருளிய கந்தவேளின் திருக்கோலத்தைத் திருமால், பிரமன்இந்திரன் முதலிய தேவர்கள் தம் கண்களுக்கு ஓர் அரிய அமிருதத்தைப் பெற்றாற்போலத் தரிசித்து ஆரவாரம் செய்தனர்; மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளினர்; ஆடிப்பாடிப் புளங்காகிதம் அடைந்தனர்; பூமழை பொழிந்து திருவேலிறைவன் திருவடிகளைத் தொழுது வலம் வந்து மகிழ்ந்து துதி செய்யலாயினர்.

தேவர்கள் எம்பெருமானை நோக்கி, ''சுவாமி! தாங்கள் வேற்படையினால் சூரபன்மனைச் சங்கரிக்கவில்லை. தங்களை வணங்குகிற அடியேங்களது வினையின் வேரை அறுத்தீர்கள். இனி எங்கட்குவேறோர் குறையுண்டோ? அவுணர்கள் நூற்றெட்டு யுகங்களாக எங்களை வருத்தினார்கள். உய்யும் வகையின்றி நாங்கள் உலைந்தோம். அவ்வாறு உலைந்த எங்களை உய்விக்கும் பொருட்டே தேவரீர் ஆறு திருமுகங்கள் கொண்டு திரு அவதாரம் செய்து காத்தருளினீர்கள். உலகில் இனி வேதாசாரங்கள் நிலை பெறும்.

நாங்கள் ஆஹுதியும் பழைய செல்வங்களும் பெறுவோம். இவை யாவற்றுக்கும் மேலாக கண்ணுக்கு நேராகத் தங்கள் லீலை கண்டு காண்பானும், காட்சியும், காட்டுவானும், காட்சிப் பொருளும் ஆகிய இவையெல்லாம் தேவரீரே என்பதை உணர்ந்தோம். இனி தேவரீரின் திருவடிகளுக்கே தொண்டு பூண்டோம்'' என்று கூறித் துதித்தார்கள்.

தம்மைத் துதித்த இமையவர்கட்கெல் லாம் ஆறுமுகப் பெருமான் அருள்பாலித்தார்.

போர்க்களத்தில் இறவாது தப்பிய அவுணர்கள் சிலர் வீரமகேந்திரபுரி அரண் மனைக்கு ஓடோடிச் சென்று முருகப் பெரு மானின் வேற்படையால் சூரபன்மன் இறந் தான் என்ற செய்தியைச் சூரபன்மனின் பட்டத்தரசி பதுமகோமளைக்கும் மற்றைய மனைவியர்க்கும் சொன்னார்கள். இச்செய்தி செவியில் முழுவதும் புகு முன்னரே பதும கோமளை இடியால் தாக்குண்ட நாகம் போல் தரையில் சாய்ந்தாள். அவ்வளவில் அவள் ஆவி பிரிந்தது.

''காவல்மன்னவன் இறந்தனன் எனும்உரை
கன்னத்துள்
மேவும் எல்லையில் அசனிஏறுண்டவெம்
பணியேபோல்
தேவி யாகியபதுமகோ மளைஎனும்
திருமங்கை
ஆவிநீங்கினள் தலையளி யாகியததுவன்றோ?''

பத்தினி, பதியின் மாட்டுக் கொள்ளும் தலையாய அன்புக்கு எடுத்துக்காட்டு இது வன்றோ? சூரபன்மனின் மற்றைய மனைவி யர்கள் செய்தியறிந்து இதயம் துடித்துக் கொண்டு அலறினார்கள். தீக் குண்டம் ஒன்றை உண்டாக்கி இறந்த பதுமகோமளையின் உடலை அதிலிட்டுத் தாமும் அதில் வீழ்ந்து இறந்தார்கள். அப்பொழுது கதிரவன் மறைந் தான். மாலைக் காலம் ஆயிற்று. ஆழ்நரகத் தில் அதுகாறும் அவுணர் புறமிருந்த இலட்சுமி நீங்கினாள்.

சூரபன்மன் இறந்த செய்தி, மீனாகக் கடலில் ஒடிஒளிந்த இரணியனுக்கு எட்டியது., தன் பிதா இறந்ததையும், அவன் சேவலும். மயிலுமாய்ச் செவ்வேளுக்கு அடிமைப் பட்டதையும் கண்டு கலங்கி, வான வீதியில் நின்று அழுதான்.

''ஆழியான் வேத னமரர்க் கிறைமுதலோர்
வாழியா யென்று வழுத்தியிட வைகியநீ
பூழியார் மேனிப் புராரிசிறு வன்தேரில்
கோழியாய் நின்று விலாவொடியக் கூவுதியோ.

''ஓகையா லண்டத் துயிர்களெல்லாம்
வந்திறைஞ்சச்
சேகையாய் மல்குந் திருத்தாள்கொண்
டுற்றிடுநீ
வாகையார்கின்ற வடிவேற் கரத்தோனைத்
தோகையாய்நின்று சுமக்குதியோ
தோன்றலோ!''

''முன்பு உன் பக்கமாய் நின்று போரில் உயிரை விடாமல் ஒளிந்து உய்ந்த நான், இன்று உன்மீது அன்பு கொண்டவன் போல் அழு கின்றேன்; அதனால் பெரும் பழிக்கு ஆளா னேன். புத்திரர்கள் தந்தைக்குச் செய்யும் கடமையினின்றும் நீங்கினேன்''.

''அப்பா! நீ இறவாது மயிலும் சேவலும் ஆகியிருப்பதால் நீர்க் கடன் செய்வதற்கும் நான் பாக்கியம் செய்யவில்லை. என்னைப் பற்றிநீ என்ன நினைக்கின்றாயோ?'' என்று பலவாறாகக் கூறி அழுதான். பின்னர் ராஜகுருவான சுக்கிராச்சாரியரை அணுகி இறந்த மற்றவர்க்கெல்லாம் நீர்க்கடன் செய் தான். பின்னர், 'துன்பத்துக்கு வித்து செல் வம்' என்பதை உணர்ந்து சிவபெருமானைத் தியானித்து முக்தி பெறும் பொருட்டு ஒரு புறம் போய்த் தவம் மேற்கொண்டான்.

வேலாயுதக்கடவுள் வீரவாகுதேவரை அன்புடன் நோக்கி, ''வீரனே! இந்திர குமார னாகிய சயந்தனையும், தேவர்களையும் சிறை யினின்றும் மீட்டுக் கொண்டுவருவாய்'' என்று அருளினார். வீரவாகுதேவர் சிறைச் சாலையை அடைந்தார். சிறையிலிருந்த தேவர்கள் அரம்பையர் ஆகியோரின் கால் களிற்பட்ட விலங்குகள் தாமே தெறித்து ஒடிந்தன. எம்பெருமான் அசுரரை வென்ற சுபச் செய்தியை அமரர்கள் கேட்டு ஆனந் தித்தனர். அனைவரும் போர்க்களத்தை அடைந்து குமாரக் கடவுளை வலம் வந்து வணங்கினர்.

சயந்தன் தனது பிதாவாகிய இந்திரனை வணங்கினான். இந்திரன் சயந்தனை எடுத்துத் தழுவி இன்புற்றான்.

சூரபன்மனுடன் செய்த சமரில் அமரர்புற மிருந்து இறந்த பூதர்கள் அனைவரும் எழுந்து வருமாறு திருவுளங்கொண்டார். இறந்த பூத கணங்கள் யாவரும் உயிர்பெற்று எழுந்துவந்து கூடி, குமாரக் கடவுள் சந்நிதியை அடைந்து அவரை வணங்கின. வடிவேலண்ணல் வருண பகவானை அழைத்து ''நாம் தண்டு இறங்கி இருந்த இலங்கை தவிர வீர மகேந்திரபுரியை யும் அவுணரின் ஏழு தீவுகளையும் அழித்து விடுக'' என்று கூறியருளினார். வருணன் உடனே வீரமகேந்திர புரியையும் துவீபங் களையும் கடலினுட் கொண்டான்.

அரிஅயனாதி அமரர்களும் இலக்கத் தொன்பது வீரர்களும் துதி செய்து மருங்கில் வர, முருகப் பெருமான் போர்க்களம் நீங்கி இலங்கையையும் கடலையும் கடந்து ஜயந்தி மலை என்கின்ற சிறப்பு மிக்க செந்திற்பதியை யடைந்தார். மயில் வாகனத்தினின்றும் இறங்கிக் கோயினுள் புகுந்தார். தேவர்கள் துதிக்க, எல்லா உயிர்கட்கும் அருள்புரியும் பெருங்கருணையுடன் திவ்விய சிங்காதனத்தின் மீது இனிது வீற்றிருந்தருளினார். அப்போது சூரியன் மேற்குக் கடலில் மூழ்கினான்.

தேவர்கள் முருகப் பெருமானுடைய உத் தரவுப்படி, திருமஞ்சனத்துக்காக, நறுமலர், சந்தனம், தூபம் தீபம், முதலியவைகளைக் கொண்டு வந்தார்கள். முருகப் பெருமானுக்குத் தாங்கள் பூஜை செய்யப் போகிறோம் என்ற ஆனந்தம் அவர்களுக்கு. ஆனால் எளிமையிற் சிறந்த ஏந்தலோ தாம் பூஜை பெறும் தெய்வ மாயிராமல் பூஜை புரியும் தெய்வமாயிருக்க விரும்பினார்.

[தொடரும்]



# ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ!

கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன்

## (15)

அனந்த குண பாண்டியன் என்பவன் மதுரையை அரசாட்சி செய்யுங் காலத்தில் திருப்பத்தூரிலிருந்த பிராமணன் ஒருவன் தன் இளம் மனைவியுடனும், சிறுகுழந்தையுடனும், மதுரையை நோக்கி வந்தான். வரும் வழியில் அந்தப் பெண் தாகத்தால் வருந்த அவளையும் குழந்தையையும் ஒரு ஆலமரத்தின் நிழலில் தங்கச் செய்து பிராமணன் தண்ணீர் கொண்டு வரச் சென்றான். திடீரென்று பெருங்காற்று வீச, அந்த ஆலமரத்தில் எவராலோ எய்தப்பட்டு ஒரு கிளையில் தைத்திருந்த அம்பு, உருவிக் கொண்டு மரத்தினடியில் படுத்திருந்த பார்ப்பனியின் வயிற்றில் தைக்க, அவள் இறந்தாள். தண்ணீர் கொண்டு திரும்பி வந்த மறையவன் இறந்து கிடந்த தன் மனைவியைக் கண்டான். இப்பேர்ப்பட்ட பெண் பழியை யார் செய்தார் எனத் திடுக்கிட்டான். செருப்பணிந்த கால்களுடன், கச்சை கட்டிக்கொண்டு, வில்லும் அம்பும் ஏந்தி நின்ற வேடனொருவனைக் கண்டு இவன் தான் தன் மனைவியைக் கொன்றிருக்க வேண்டுமெனத் தீர்மானித்தான்.

''காப்பணி தோளன் வாளொடு வீக்கிய
கச்சாளன்
கூர்ப்பகழி கோலெறிடு வில்லன் கொலை
செய்வான்
ஏற்பனகைக்கொண்டு இவ்விடை நின்றான்
இவனேயென்
பார்ப்பனியைக் கொன்றின்னுயிருண்டு
பழிபூண்டான்''

''ஐயோ! என் மனைவியைக் கொன்று விட்டாயே!'' எனக் கத்திக் கொண்டேசென்று அவ்வேடனைப் பிடித்து கொண்டான். இறந்து போன மனைவியின் உடலைத் தோளில் போட்டுக் கொண்டு அன்னையிடம் அமுதமுண்ண வேண்டுமென்று அலறும் அறியாத குழந்தையைக் கண்டு விம்மி விம்மி அழுது கொண்டு வேடனை மதுரைக்கு அழைத்து வந்து அரண்மனை வாயிலில் நின்றுமுறையிடலானான். ''அரச தர்மம் மீறாத பாண்டியனே, முறையிடுகின்றேன். தாமரையில் வாழும் திருமகளைத் தன்மார்பில் வைத்து வாழும் திருமாலின் தமையனே! முறையிடுகின்றேன்! சந்திரகுலத்தில் பிறந்தவனே! முறையிடுகின்றேன். குற்றம் செய்யாத காலத்தும் கையை வெட்டிக் கொண்டு தண்டனையேற்றுக் கொண்ட பாண்டியனே முறையிடுகின்றேன்'' என்று அலறினான்.

''கோமுறை கோடாக் கொற்றவரேறே
முறையேயோ!
தாமரையாள் வாழ் தண்கடி மார்பா!
முறையேயோ!
மாமதி வானோன் வழி வருமைந்தா
முறையேயோ
தீமைசெய்தாய் போற் செங்கைகுறைத்தாய்
முறையேயோ''

ஒரு சமயம் நகர்ச் சோதனைக்காக மாறு வேடம் பூண்டு வந்த பாண்டியனொருவன், பார்ப்பனர் வாழும் தெரு வழியாக வந்தபோது ஏதோ ஒரு குரல் கேட்டு நிற்க, அன்றைய தினத்திற்கு மறுதினம், அந்த வீட்டிற்கு உடையவனான அந்தணன் தன் இளம் மனைவியிடம் காசி செல்ல விடைபெற்றான். இளம் வயதினளான அப்பெண்மணி ''நான் எவ்வாறு தனியாயிருப்பேன்?'' என வருந்த, பெண்ணே! பாண்டியன் நீதிமான்! அவனது செங்கோல் உன்னைக் காக்கும்'' என்றான். மறு தினம் அந்த அந்தணன் காசி சென்று விட்டான் என்பதையறிந்த அரசன் அப்பெண்ணிற்கு வேண்டிய சௌகர்யங்களை செய்ய எண்ணினான். அவளுக்கு மாத்திரம் உதவி செய்தால் அவளுக்கு ஏதாவது இடையூறு நேருமென எண்ணி அந்த அக்கிரகாரத்திலுள்ள வீடுகள் அனைத்துக்கும் சாப்பாட்டிற்கு வேண்டிய சாமான்களை அனுப்பினான். தினமும் இரவு நகர் சோதனைக்கு வரும்போது, அந்த பார்ப்பனி நன்கு உறங்குவது கண்டு, அவளுக்கு எந்தவித குறைவுமில்லை என அறிந்து சென்றான். ஆறு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் இரவு அந்த வீட்டில் எவரோ பேசும் குரல் கேட்டு, அது ஆண் குரலாக இருப்பது கண்டு. அப்பெண் தனியாயிருப்பதையறிந்த எவனோ ஒரு பாதகன் அப்பெண்ணைத் துன்புறுத்துகிறான் என்பதாக எண்ணி, அவளைக் காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே, அவ்வீட்டின் கதவை தட்டிவிட்டான். ''யார் அது?'' என்ற குரல் கேட்கிறது. காசிக்கு சென்ற பிராமணன் திரும்பி விட்டான். கதவு தட்டப்பட்டதன் காரணமாக அந்த பிராமணன், தன் மனைவி மீது விபரீதமான சந்தேகம் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று பிரமித்து, ''நாம் நல்லஎண்ணத்துடன் செய்த செயல் ஏதாவது துன்பத்தை உண்டாக்கிவிடுமோ'' எனத் திகைத்து, பின் ஒரு வாறு தேறி, அந்தப் பெண்ணின் மீது சந்தேகம் ஏற்படக் கூடாது என்பதற்காக அந்தத் தெருவிலுள்ள எல்லா

வீட்டுக் கதவுகளையும் தட்டிச் சென்றான். மறுதினம் அக்கிரகாரத்திலுள்ள பிராமணர் அனைவரும் சேர்ந்து முன்தினம் நள்ளிரவில் எவனோ ஒரு திருடன் தமது அக்கிரகாரத்துட் புகுந்து எல்லா வீட்டு கதவுகளையும் தட்டினான் என அரசனிடம் கூற, ''கதவை தட்டிய கள்வன கிடைத்தால் அவனுக்கு என்ன தண்டனை அளிக்கலாம்?'' என அரசன் அவர்களிடமேகேட்க, விவரமறியாத இளம் பார்ப்பனன் ஒருவன் ''கதவைத் தட்டிய கள்வனின் கையை வெட்டுவதுதான் தக்க தண்டனை'' என்று கூறியபோது, பாண்டியன் தனது இடது கையால் வாளெடுத்து வலது கையை துண்டித்துக் கொண்டு துடித்தனன். பிராமணர்கள் பிரமித்தனர். பாண்டியன் விவரம் பூராவும் கூற, அந்தணர்கள் மனம் வருந்தி சோமசுந்தர பெருமானையும் மீனாட்சியம்மையையும் வணங்க, பாண்டியனின் கை பொன்கையாக வளர்ந்தது. பாண்டிய வம்சத்திற்கு ''பொற்கையான் மாறன்'' என்ற பட்டம் கொடுக்கப் பெறுகிறது. பிராமணன் அத்தகைய நேர்மையை நினைவுறுத்தும் வகையில் ''தீமை செய்தாய் போல் -செங்கை குறைத்தாய் முறையேயோ!'' எனக் கூவினான்.

அரசன் அரண்மனையிலிருந்து வெளி வந்து கேட்க, இன்று என் மனைவியை ஆலமர நிழலில் விட்டு, தண்ணீர் கொண்டு திரும்பும் முன், ''இவ்வேடன் அவளைக் கொன்று அயலே நின்றான்'' என்று கூறினான். கொலைக் குற்றத்திற்குச் சாட்சி கொலையை கண்ணால் கண்டேன் என்று ஒருவர் கூறினால்தான் நம்ப முடியும். அந்தணன் கொலை செய்ததைத் தன் கண்ணால் கண்டேன் என்று இங்கு கூறவில்லை, என்பது குறிப்பு. மேலும் கொலை செய்தவன் செய்த பின் ஓடித் தப்ப முயல்வானே தவிர, அங்கு நிற்கமாட்டான் என்பதைச் சிந்தித்தால், வேடன் கொலை செய்யவில்லை எனத் தெளிய முடிகிறது. ஆயிரம் குற்றவாளிகள் தப்பிவிடலாம். குற்றமற்ற ஒருவன் தண்டனையடைந்து விடக்கூடாது என்பர் நல்லோர்.

அரசன் வேடனைக் கேட்க, ''ஐயா! நான் அந்த பெண்ணைக் கொல்லவுமில்லை. கொன்றவர் எவரையும் காணவுமில்லை'' என்றான். தான் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உடையவனாயிருந்தால், ''எவரோ வழியாக ஓடினார் பார்த்தேன். அவர் கொலை செய்திருக்கலாம்'' என்று கூறியிருக்கலாம். வேடன் பொய் கூறாதிருந்தது விளங்குகின்றது.

அப்போது மந்திரிகளில் ஒருவன், ''நான் செய்தேன் என்று எவர் ஒப்புக் கொள்வார்? நன்றாக அடித்துக் கேட்டால்தான் கூறுவான்'' என்று கூற அவனை ரொம்பவும் துன்புறுத்தினார்கள். வேடன் என்னவிதமாகக் கேட்பினும் ஒரே மாதிரிதான் பதில் உரைத்தான். ''என்ன தண்டித்தாலும் பயப்படாமல், ஒரே மாதிரிதான் பதில் கூறுகிறான். கொலை செய்தவனுடைய தோற்றம் அவன் முகத்தில் இல்லை. இவளைக் கொலை செய்வதால் அவ



னுக்கு என்ன பயன்? வேறு யார் இவ்வாறு செய்திருக்கலாம்'' என யோசித்தான் அரசன்.

''ஆற்றவொறுக்கும் தண்டமும் அஞ்சான்
அறைகின்ற
கூற்றமு மொன்றே; கொன்ற குறிப்பு
முகந்தோற்றான்
மாற்றவரேயோ? மாவோ? புள்ளோ? வழி
வந்த
கோற்றொடியைக் கொன்றோன் பெறவல்லான்
கொலை செய்வான்?''

''இது தெய்வத்தினால் தான் தெளிய வேண்டும்'' என எண்ணிய அரசன், வேதியனை மனைவியை அடக்கம் செய்யுமாறு ஏவி, வேடனைச் சிறையிலிட்டான். வேதியன் மனைவிக்கான கடன்களைச் செய்து திரும்பிய பின், அவனை அழைத்துக் கொண்டு சோமசுந்தரப் பெருமானின் ஆலயத்தையடைந்து,

''மதுரை நாயகனே! இவ்வேடன் அந்தப் பெண்ணைக் கொன்றானா? பிறர் சொல்கிறார்களே? இது தருமநூல் எதனாலும் அளவிட முடியவில்லை. எனது குறை தீர இதைத் தெரிவிக்க வேண்டும் என்ற போது, இறைவன் திருவருளினாலே ''மதுரைக்கு வெளியில் ஓரிடத்தில் செட்டியார் தெருவில் ஒரு திருமணம் இன்றிரவு நடைபெறுகிறது. அங்கு இந்த வேதியனோடு வா. உனக்கு புரியாதவற்றை புரிய வைப்போம்'' என ஒரு வாக்கு எழுந்தது.

''திருநகரின் புறம்பொரு சார்குல வணிகத்
தெருவில் கண்
ஒரு மனையின் மணமுளது; அங்கு அந்தண
னோடொடுங்குநீ
வருதி: உனது உளந்தேற மாற்றமெலாந்
தேற்றுதும் என்று
இருவிசும்பின் அகடுகிழித்து எழுந்ததால்
ஒருவாக்கு''

அவ்வாறே பாண்டியனும் பிராமணனும் செட்டித் தெருவிலுள்ள திருமண வீட்டை அடைந்தனர். கலியாண மாப்பிள்ளைக்கு அன்று ஆயுள் முடிவான நாளானதால் அவன் உயிரைக் கொண்டு செல்ல எமதூதர் தோன்றினர். ''இவன் உயிரை கொண்டு வருமாறு நமது தலைவரான யமதருமராசர் கட்டளையிட்டுள்ளார். ஒருவித பிணியும் இல்லாமல், மணக்கோலத்தில் உள்ளான். எப்படி இவனை நாம் கொண்டு செல்வது'' என்று ஒருவன் கேட்க, மற்றொருவன், 'ஆலமரத்தில் எவரோ கோத்து வைத்திருந்த அம்பைக் காற்றாலே தள்ளி, திருப்பத்தூர் பார்ப்பனியின் உயிரை எடுத்தோமே! அவ்வாறே இங்குள்ள பசுவை தாலி கட்டும்போது, வாத்திய ஓசையில் மிரளும் படி செய்து, மாப்பிள்ளையை முட்டிக் கொல்லுமாறு செய்வோம்!'' என்றான். அரசன் அந்தணனைச் சாடையாகக் காண, ''மாப்பிள்ளை அவ்வாறு இறந்தால் என் மனைவியும் அவ்வாறு இறந்ததை ஒப்புக் கொள்ளுவேன்'' என்றான். திருமணத்திற்கான ஒரு இளைஞன் இறக்கப்போகும் செய்தியை அறிந்த பிராமணன் அத்திருமணத்தை உடனே நிறுத்துமாறு கூறி ஒரு உயிரைக் காத்திருக்கலாம்! எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டொழுகவேண்டிய மறையவன் ஏன் இவ்வாறு இருந்தான் என்று நினைக்கத் தோன்றுகிறது. சிறிது நேரம் கழித்துப் பல வாத்தியங்கள் ஒலிக்க, அங்கு கட்டியிருந்த பசு, திடீரென்று சுறுக்குக் கொண்டு மாப்பிள்ளையை முட்ட அவன் இறந்தான். முழவொலி இழவொலியாயிற்று. மின்னல் போன்றது வாழ்வு என்பதை மெய்ப்பித்தது மணமகனின் மறைவு.

''மணமகனே பிணமகனாய் மணப்பறையே
பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலி போய் அழுகை
யொலியாய் கழிய
கணமதில் பிறந்திறு மிக்காயத்தின் வரும்
பயனை
உணர்வுடையார் பெறுவர் உணர்வு
ஒன்றுமிலார்க் கொன்றுமிலை.''

பிராமணன் இது கண்டு மனைவி இறந்த காலத்து ஏற்பட்ட துன்பத்தைக் காட்டிலும் அதிக துன்பமடைந்தான். அரசன் பிராமணனை மற்றொரு மணஞ்செய்து கொள்ள உதவி செய்து, வேடனை விடுதலை செய்து, தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து இறைவனை வணங்கி எனக்காக பழியஞ்சிய சொக்கரானீர்' என வணங்கினான்.

ஒரு தலைவி மதுரை நாயகனான சொக்கநாயகனைக் கண்டு ஆசை கொள்ளுகிறாள். இறைவனது இடப்பாகத்திலுள்ள அம்மையைக் கண்டவுடன் தனக்கு இறைவன் கிட்டமாட்டான் என்ற எண்ணத்தில் உயிர்விடுவாள் போலானாள், அப்போது அவளது தோழி, ''பழியஞ்சிய சொக்கநாதருக்கு இப்பெண் மறைந்து விட்டால் பழி வந்துவிடுமே'' என அஞ்சியதாக ஒரு பாடல் பாடியுள்ளார் நம் குமரகுருபர முனிவர்.

''பைந்தமிழ்தேர் கூடற் பழியஞ்சியார்க்கு
அவமே
வந்ததொரு பெண்பழிஎன் வாழ்த்துகேன்-
அந்தோ!
அடியிடு முன்னனயர்க்கடுத்தவா கெட்டேன்
கொடியிட பாப்போந்தகுறை''

திருவிளையாடற் புராணத்தில் நம் முனிவர் பிரானுக்குரிய ஈடுபாட்டை உணர்த்துகிறது மதுரைக் கலம்பகத்திலுள்ள இச்செய்யுள்.

[தொடரும்]

# ஆலயங்கள் ஆற்றும் அரும்பணி

**எங்கேயும் உள்ள மின்சாரத்தை வெளிப்படுத்த ஆங்காங்கே மின்சக்தி ஸ்தாபனம் (Power House) இருப்பது போல், எங்கும் உள்ள ஈசுவர சக்தியை வெளிப்படுத்த ஆங்காங்கே மந்திரபூர்வமாக ஆகமபூர்வமாக ஆலயங்கள் எழுப்பப்பட்டு அவற்றின் பூஜாக்கிரமங்கள் உருவாகி உள்ளன.**

—ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

# காத்தருளும் கஞ்சமலைச் சித்தர்

—திருமதி சௌந்தரா கைலாசம்

மணமலர்கள் சிந்துகின்ற நறுந்தேனின் வெள்ளம்
மண்டிவந்து பயிர்வளர்க்கும் எழிற்கொங்கு நாட்டில்
அணிகலனாய் விளங்குமுயர் கஞ்சமலைக் காட்டில்
ஆனையதன் போர்வையுடன மான்மழுவும் நீல
மணிமிடறும் கொண்டஅரன் திருவுருவைக் காண
மனம்விரும்பி ஆயிரம்நல் ஆண்டுதவம் செய்த
குணநிதியே! சுந்தரனே! சித்தர்பெரு மானே!
கும்பிட்டு வாழ்த்துகிறேன்! வாழியநீ வாழி!

அந்தணரின் திருக்குலத்தில் நீபிறந்து வந்தாய்!
அழகுடைய சுந்தரனென் றரியபெயர் பெற்றாய்
சிந்தையதில் சிவநெறியே சிறந்ததெனத் தேர்ந்தாய்
திருமலரால் அருச்சித்துச் சரியைநெறி நின்றாய்
வந்தஇறை உன்தவத்தை மெச்சியுகம் எல்லாம்
வாழ்ந்திடுக கஞ்சமலைச் சித்தனெனச் சொல்லித்
தந்தவரம் பெற்றுலகைச் சந்ததமும் காப்பாய்
தவமணியே உன்னிருதாள் தலைவணங்கு வேனே!

மூலத்தைக்கண் டறிந்து முத்திநெறி சொன்ன
மூலனுக்குச் சிறப்புடைய மாணாக்க னாகிச்
சீலத்தோ டவனுக்குப் பணிவிடைகள் செய்தாய்
தினந்தோறும் மனம்நாடி நல்லுணவு சமைத்தாய்
கோலத்தில் படுகிழவன், உணைக்கரிய நெல்லிக்
குச்சியினால் கிளறியசோ றிளையவனாய்ச் செய்ய
காலத்தை வென்றதிரு மூலனவன் உன்னைக்
கக்குவித்து மிச்சிலையுண் டெழிற்குமரன் ஆனான்.

மூப்பதனை மாற்றுகிற கருநெல்லிக் கனியும்
மோதுகிற போரதனில் வரும்புண்கள் மாற்றிக்
காப்பாற்றும் மூலிகையாம் கரணிவகை மூன்றும்
காலனிடம் சென்றுவிட்ட உயிரதனை மீட்டு
வாய்ப்பாக மறுபடியும் வாழ்விக்கும் அமிர்த
சஞ்சீவி மருந்ததுவும் வளர்கஞ்ச மலைமேல்,
தாய்ப்பாசத் தோடுபுவி தழைப்பிக்க வந்தோய்
தவத்திலுயர் காலாங்கி மாமுனியே போற்றி!

**மஞ்சுவந்து தவம்புரிந்து வானகத்து வீட்டில்**
**வசிப்பவர்க்கு மருந்தெடுத்துக் கொண்டுசென்று வழங்கும்**
கஞ்சமலைக் கருங்காட்டில் விளைந்தெடுத்த பொன்னால்
கனகசபை தில்லையிலுண் டானதெனச் சொன்னால்
செஞ்சொல்லால் அம்மலையின் சிறப்பனைத்தும் எளிதில்
செப்புதற்கு முடிந்திடுமா? அதுமட்டும் தானா?
மிஞ்சுமெழிற் கரும்பொன்னும் விளைந்தங்கு நாட்டை
மிக உயர்த்தும் பெருமையைத்தான் இயம்பிவிட லாமோ?

தேகங்கள் வலிவெய்தித் திகழ்ந்திடவே உதவும்
சிறப்புடைய மூலிகைகள் தேர்ந்தெடுத்துச் சொன்னாய்
ஆகமநன் நெறிகளினை மூலனிடம் கற்றே
அகிலத்து மானுடர்கள் அதையறியச் செய்தாய்
யோகங்கள் எட்டினையும் சித்திவகைஎட்டும்
உலகுக்குப்பயன்தரவே நீயறிந்து கொண்டாய்
சோகங்கள் அத்தனையும் ஒரு நொடியில் மாற்றிச்
சுகம்பெருக வழிபுரிவாய்! வாழியவே வாழி!

மூதறிவைக் காட்டுகிற விரிவுடைய நெற்றி
மூண்டிச்செய்த சென்னியின்மேல் உருத்திராட்ச மாலை
தீதறவே ஒருகால்மேல்மற்றொருகால் போட்டுச்
செம்மையுடன் நல்வீரா சனமிட்ட பொலிவு
பாதமலர் தெரிகின்ற படியிருக்கும் கோலம்
பரவிடுவார்க் கருள்தரும்சின் முத்திரைகொள் வலக்கை
சீதளத்தைச் சிந்துமொளிச் சந்திரன்போல் விழிகள்
சேர்ந்திலங்கும் உருவுடைய தூயவனே போற்றி!

கண்மூன்று கொண்டவனின் காலடியைப் பற்றிக்
கறையற்ற மெய்ஞ்ஞானம் சார்ந்தவராய் நின்று
பண்பட்ட பேரறிவின் பெட்டகமாய்வாழ்ந்து
பரமனவன் தானேயென் றுள்ளுணர்வு கொண்டோர்
மண்போற்றி மதிக்கின்ற சித்தரெனப் படுவர்
மாமலையாம் கஞ்சமலைதனில்வாழும் நீயோ
விண்ணோர்க்கும் நல்லறிவின் விளக்கமதை நல்கும்
வித்தகம்சேர் சித்தரென விளங்கிடுவாய்! வாழி!

தங்கத்தை வழங்குமுயர் கஞ்சமலை வனப்பு
சவுந்தரநற் கயிலாய மலையழகை ஒக்கும்
அங்கத்துப் புண்களினை ஆற்றிநெடு வாழ்க்கை
அளிக்கின்ற கரணிகளும் கருநெல்லிக் கனியும்
துங்கத்து மலையதன்மேல் வளர்ந்துதவி புரியும்
தூயவன்நீ அங்கிருக்கும் காரணமும் அதுவோ?
எங்கட்கு வாய்த்ததுணை என்றிலங்கும் தேவே
இருகரமும் கூப்புகிறோம்! அருள்புரிவாய் நீயே!

உன்னுடைய வாசலுக்கு வருகின்ற மாந்தர்
உள்ளுகுறை அத்தனையும் ஓடிவிடக் காண்பர்;
பொன்பெருகிப் புகழபெருகி இறுதிவரை உதவும்
புதல்வர்களைப் பெறுகின்ற புண்ணியத்தை அடைவர்
இன்பமெலாம் வசமாகி எப்பொழுதும் புவியில்
எல்லாரும் வணங்குகிற ஏற்றத்தைப் பெறுவர்
அன்புருகி உனைவணங்கி நிற்கின்றோம ஐயா
ஆதரித்துக் காத்தருளல் உன்கடமை தானே!

நாதன்தாள் வாழ்க.



# லிங்கபுராணம்

வித்யாவாசஸ்பதி
டாக்டர் இரா. நாகசாமி [3]

சிவபெருமான் முப்புரம் எரித்த வரலாறு வேதங்களிலும் மஹாபாரதத்திலும் குறிக்கப்படுகிறது. அசுரர்களால் மூவுலகமும் துன்புற்றன. தேவர்கள் அனைவரும் சிவபெருமானே அசுரர்களை அழிக்கவல்லவர் என்று அவரிடத்தில் சென்று தங்களைக்காக்க வேண்டுகின்றனர். அவ்வமயம் சிவபெருமான் 'நீங்கள் அனைவரும் உங்களது பலத்தில் பாதியை எனக்கு அளியுங்கள். உங்களனைவரது பலத்தையும் கொண்டு நான் அவர்களை அழிக்க வேண்டும். துன்புற்ற நீங்கள் அனைவரும் பசு என்ற தன்மையை ஏற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது நான் பசுக்களுக்கெல்லாம் பதியாக தலைமை பூணுவேன். பதி என்றதலைமை ஏற்பதால்,அதர்மம் புரியும் அசுரர்களைத்தண்டித்து அழிக்கிறேன். பசுபதியாக அவர்களை நான் அழித்தால் எவ்வித பாபமும் ஏற்படாது. அதற்குரிய ரதத்தையும் படைகளையும் உருவாக்குங்கள்'' என்று கூறினார். இவ்வாறு மஹாபாரதம் கர்ணபர்வத்தில் குறிக்கப்பட்டுள்ளது

''பசுத்வம் சைவ மே லோகா:
சர்வே கல்பந்து ।ீடிதா:
பசூனாம்து பதித்வம் மே
பவது அத்ய திவௌகஸ;
எவம் பாவம் ந ப்ராப்ச்யாமி
பசூன் ஹத்வா சுரத்விஷ:''

நீங்கள் அனைவரும் பசுத்தன்மை பூண்டு கொள்ளுங்கள் என்று சிவபெருமான் கூறியதைக் கேட்டு தேவர்கள் வருத்தமும் ஐயமும் கொண்டனர். அதையறிந்த சிவபெருமான் ''நீங்கள் வருத்தம் அடைய வேண்டாம். பசுத்தன்மை என்பதே மோட்சம் பெறுவதற்காக அமைவதுதான். பசுபதியை யார் வழிபடுகிறார்களோ அவர்கள்மோட்சம் அடைவார்கள். இவ்வுறுதியை நான் உங்களுக்கு அளிக்கிறேன். நீங்கள் மட்டுமல்ல,யார் பசுபதியை வழிபட்டாலும், ஆயுள் முழுவதுமோ, பன்னிரண்டாண்டுகளுக்கோ ஆறுஆண்டுகளுக்கோ,ஒருஆண்டோடு மூன்றுருதுக்களோ ஒரு மாதத்துக்கோ, 12நாட்களுக்கோ, பசுபதியை வழிபடுவார்களானால் அவர்கள் தமது பசுத்தன்மையால் மோட்சம் பெறுவார்கள். ஆதலால் பசுபதியை வணங்குங்கள். பசுபதியை வணங்கும் இந்த விரதம் உத்தமமானது. போற்றத் தகுந்தது. என்று

''மா வோஸ்து பசுபாவே அஸ்மின்
பயம் விபுத ஸத்தமா:
ச்ரூயதாம் பசுபாவஸ்ய
விமோட்சம்: க்ரியதாம் சஸ:
யோ வ: பசுபதே: சர்யாம்
சரிஷ்யதிஸ மோட்சயதே
பசுத்வாத் இதி ஸத்யம் வ:
ப்ரிதிஜானே ஸமாகமே
யே சாபி அன்யே சரிஷ்யந்தி
விரதம் மோட்சயந்தி தேபி ச''

சிவபெருமானின் இவ்வறிவுரைப்படி தேவர்கள் நடந்தனர். எல்லா உயிர்கட்கும் அப்பொழுதிருந்து சிவபெருமான் பதியாகத் திகழ்ந்ததால் அவர் 'பசுபதி' என்று அழைக்கப் பெற்றார். தேவர்களுக்கெல்லாம் தேவராக, தேவதேவர் என்றும் மகாதேவர் என்றும் பெயர் பெற்றார் என மாபாரதம் கூறுகிறது.

தத: ப்ரப்ருதி தேவானாம்
தேவதேவோ அபவத் பவ:
பதி: சர்வபூதானாம்
பசூனாம்ச அபவத் ததா
தஸ்மாத் பசுபதி: ச உக்த:
பவத்வாத் பவேதி ச

என்ற செய்யுள் இதைத் தெளிவுபடுத்துகிறது. இலிங்கபுராணத்தைக் காட்டிலும் மகாபாரதம் காலத்தால் முந்தியது. வேதத்திலேயே இது கூறப்பட்டிருக்கிறது எனக் கண்டோம். பசுபதியை வழிபடுபவர்கள் பாசுபதர்கள். இவர்களை 'மாகேச்வரர்' என்றும் அழைப்பர். ஆதலின் 'பாசுபதம்' என்னும் சமயம் வேத காலத்திலிருந்தே விளங்கி வந்திருக்கிறது. என்பதில் ஐயமில்லை. வேதத்தின் கருத்துப்படி தேவர்கள் அனைவரும் பாசுபதர்களே.

பசுபதி என்ற பெயர் சிவபெருமானுக்கு எப்படி வந்தது? பாசுபத விரதம் என்றால் என்ன? என்ற செய்திகளை இலிங்கபுராணம், திரிபுர சம்ஹாரம் கூறும் அத்யாயத்தில்தான் கூறுகிறது. குறிப்பாகச் சொல்லப் போனால் ''பசுபதியாகி சிவபெருமான் எவ்வாறு திரிபுர சம்ஹாரம் செய்தார். தேவர்கள் எவ்வாறு பசுக்களானார்கள் என்று இவ்வத்யாயம் கூறுகிறது'' என்றே அத்யாயத் தொடக்கச் செய்யுள் கூறுகிறது. இலிங்கபுராணம் மகாபார







த்தை அப்படியே பின்பற்றுகிறது எனலாம். மகாபாரதத்தில் உள்ள பல செய்யுட்களை இங்கு இலிங்கபுராணம் அப்படியே எடுத்தாண்டுள்ளது குறிக்கத்தகுந்தது.

முப்புரம் தீக்கிரையாகி வீழ்ந்தது. உடன் நான்முகன் தேவர்களுக்கு பாசுபத விரதம் என்பதை எடுத்துரைத்தார் (இலி. புரா.)

''யாரொருவர் சித்தியை விரும்புகிறார்களோ, அவர் தேவதேவனை சதாசிவமூர்த்தியாக இலிங்க வடிவில் வணங்கவேண்டும். தேவர்களாகிய நாம் அனைவரும் பசுக்களாகி இலிங்க வடிவில்அவரை கீழ்க்கண்டவாறுவணங்கவேண்டும். பூதசுத்தி முதலான ஐந்து சுத்திகளைச் செய்தல் வேண்டும். தேவர்கள் மூன்று பிராணாயாமங்களுும, மானுடர்கள் ஐந்து பிராணாயாமங்களும் செய்தல் வேண்டும். பிராணாயாமத்தை 'ஓம்' என்ற பிரணவத்துடன் தொடங்க வேண்டும். ஓங்காரத்தை உச்சரித்து பிராணனையும் அபானனையும் கட்டுப்படுத்தல் வேண்டும். 'உடலின் எல்லா அவயவங்களையும் 'ஞானம்' என்னும அமுதத்தால் நிறைத்தல் வேண்டும். பின்னர் முக்குணங்களையும், நான்கு கரணங்களையும் 5 பூதங்கள், 5 தன் மாத்திரைகள், 5 கர்மேந்திரியம், 5 ஞானேந்திரியம் ஆகிய அனைத்தையும் சோதிக்க வேண்டும். பின்னர் உடலில் திருநீறு பூசவேண்டும். பூசும்போது நீர் என்பது திருநீறு, நிலம் என்பது திருநீறு, தீ என்பது திருநீறு, காற்று என்பது திருநீறு, ஆகாயம் என்பது திருநீறு என்று சொல்லிக்கொண்டே திருநீறு தரித்துக்கொள்ள வேண்டும். (வேதங்களில் திருநீறு பூசிக் கொள்ள கூறப்பட்டுள்ள முறை இதுவே). இவ்வாறு எவன் உள்ளத்தால் உணர்கிறானோ, பாவிக்கிறானோ அவன் யோகியாகிறான். எல்லாம் அறிந்தவனாகிறான். இதைத் தான் 'பாசுபத விரதம்' என்று கூறுவது. பாசுபதவிரதத்தை இவ்வாறுஅனுஷ்டித்து இலிங்க வடிவில் சிவனை அகத்திலும் புறத்திலும் வழிபட வேண்டும்'' என நான்முகன் தேவர்களுக்கு எடுத்துரைத்தார். (இலி. புரா.)

ஏவம் பாசுபதம் க்ருத்வா
சம்பூஜ்ய பரமேச்வரம்
இலிகே பாஹ்ய அப்யந்தரே
சைவ மன்யே கர்த்வயம் ஈசுவரம்

'பாசுபத விரதம்' என்றால் ஏதோ பயங்கரமானது. கொடூரமான வழக்கங்களை உடையது என்று எழுதுவோர் உண்டு, எண்ணுவோரும் உண்டு. வேதமும், மகாபாரதமும், இலிங்க புராணமும் கூறுவது இந்த எளிமையான பாசுபதவிரதத்தைத்தான். இது தெரிந்தால் பல குழப்பங்கள் தீரும். இதை வரகுணராம குலசேகரனும் தமிழ்ப்படுத்தி தமது இலிங்க புராணத்தில் கூறுகிறார். [தொடரும்]

# சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம்

செந்தமிழ்ச் செல்வமணி **கோ. சண்முகம்**, பி.காம். **[2]**

சூழநிறைந்திருந்த தவமுனிவர்கள் உபமன்னிய முனிவரைப் பணிந்து ஆலால சுந்தரர் தோன்றிய தென்னாடு எண்திசைகளினுஞ் சிறந்து விளங்குவதற்கு அது செய்த புண்ணியம் யாது எனக் கேட்டார்கள். உபமன்னிய முனிவர், ''காண்பதாலும், சொல்வதாலும் நினைப்பதாலும், வீடுபேறளிக்கவல்ல பெருமை வாய்ந்த திருத்தில்லை, திருவாரூர், திருக்காஞ்சி, திருவையாறு, திருக்கழுமலம் முதலிய திருத்தலங்களை உடையதால் தென்னாடு பிற நாடுகளினுஞ் சிறந்தது'' என்றார்.

இவ்வாறு உபமன்னிய முனிவர் வன்றொண்டரின் தவப்பெருமையை அன்று முனிவர்களுக்குச் சொன்னதால், எனக்குண்டாகிய பேரவாவினால் திருத்தொண்டத் தொகையின் விரிவைச் சொல்ல முற்படுகிறேன். திருத்தொண்டத்தொகையே இப்புராணத்துக்குப் பதிகமாக திகழ்கிறது. அத்திருத்தொண்டத் தொகையை முதலாகக் கொண்டு பிறந்த வழி நூலாகிய நம்பியாண்டார் நம்பிகளின் திருவந்தாதியைத் தழுவி, அடியார்கள் வரலாற்றை விரித்துக் கூற யானும் முற்படுகிறேன்'' என்கிறார் சேக்கிழார் பெருமான்.

காவிரி பாயும் சோழநாட்டின் வளமையான காட்சிகளை திருநாட்டுச் சிறப்பில் அற்புதமாக தெய்வச் சேக்கிழார் விவரிக்கிறார். இயற்கைக் காட்சிகளையும், இவ்வியற்கைக் காட்சிகள் எழுப்பும் அழுத்தமான ஆன்மீக உணர்வுகளையும் ஒப்பிட்டுக் காட்டும் தெய்வீக கவிநயம் உலக இலக்கியங்களில் திருத்தொண்டர் புராணத்தில்தான் மிகுதியாகக் காணலாம்.

அகத்திய மாமுனிவர் கொணர்ந்த தூய நீரைக் கமண்டலத்திலிருந்து கவிழ்த்ததால் தோன்றிப் பெருகியதுதான் காவிரியாறு. இந்நதி ஓடும் அழகை வியந்து பூமி என்னும் எழில் நங்கையின் மார்பிலே ஒரு முத்து மாலையாகவே காவிரியாறு திகழ்கிறது என்பார் சேக்கிழார்.

''ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மன் மடந்தைபொன் மார்பில்
தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்.''

சோழ நாட்டில் காவிரி டலமுகங் கொண்டு கால்வாய்கள் வழியே ஓடிப் பாய்ந்து நீரால் நிரப்புவதால் சோழ நாட்டை நீர்நாடு-புனல் நாடு-காவிரிநாடு-சோழர் காவிரி நாடு என்றெல்லாம் கூறிச் சேக்கிழார் பெருமிதப்படுகிறார்.

சோழநாட்டின் வயற்பரப்பில் அழகிய நாற்றுக்களைப் பறிப்பவர்கள் காட்சி ஒரு புறம். அவ்வழகிய நாற்று முடிகளை நீரிற் சேர்ப்பவர்களின் காட்சி மறுபுறம். வயலை உழுது பண்படுத்தும் உழவர்கள் வரிசையாக செல்லும் காட்சி பிறிதொருபுறம். காண்பவர்களுக்கு ஆசை பேன்மேல் உண்டாக்க கூடியதாக இக்காட்சிகள் விளங்குகின்றன.

''மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் உழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்ததே''.

காண்பவரின் மனதில் நாற்றுபறித்தல்-முடிசேர்த்தல்-செய்யுழுதல் ஆகிய செய்கைகள் இனிய உணர்வுகளை எழுப்பும். இவ்வுணர்வே காதல். ''காதல் செய்வதோர் காட்சி'' என்பதற்கு கருத்தாழமிகுந்த உரை காண்பார் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். சேக்கிழாரின் இதயத் துடிப்பினை புரிந்து கொண்டு எழுதும் சி.கே.எஸ். அவர்களின் உரை பின்வருமாறு:

''கருமச் சேற்றிலே முளைக்கும் ஆன்மாக்களை அங்கிருந்து எடுத்து இறைவன் தனது புவனங்களிற் பதித்துப் போகங்களை ஊட்டிப் பக்குவப்படுத்திச் சிவானந்த பரபோகத்தை விளைவிப்பான் என்பதும், குளவிதான் எடுத்த புழுவை எடுத்த இடத்தில் தனது வடிவமாக்காது தான் கொண்டுபோய் வைக்குமிடமாகிய தனது கூட்டிலே தனது வடிவமாக்கும் என்பதுமான தத்துவக் கருத்துக்களை நினைவுபடுத்தி நாற்று முளைக்கவிட்ட இடத்திலிருந்து பறித்து, இதற்காகப் பண்படுத்திய சேற்று வயல்களில் நட்டுப் போகம் விளையும்படி செய்வனவாகிய-அங்கு குறித்த நாற்று பறித்தல் முதலிய செய்கைகள் நினைவூட்டுகின்றன. ஆன்மாக்களின் பொருட்டு இறைவன் இவைபோன்று செய்யும்




**ஆலாலசுந்தரர் கயிலை நந்தவனத்தில், கமலினி அனிந்திதை காணும் காட்சி**

அருட்செயல்கள் பலவும் நினைவுக்கு வரும். வரவே அவனிடத்துக் காதல் விளையும். இதனையே காதல் செய்வதோர் காட்சி என்று குறிக்கப்படுகிறது.'' என்பது சி.கே.எஸ். அவர்களின் உரையாகும்.

ஒருவன் சோழ நாட்டின் எல்லையை அடைகிறான். சோழநாட்டின் பரந்த பசுமையான வயல்பரப்பு அவனை இன்முகத்துடன் வரவேற்கிறது. தொலைவில் தெரிவதெல்லாம் கரும்பு என்னும் நினைவோடு நடக்கிறான். அருகே சென்று பார்த்த பொழுதுதான் தான் எண்ணியதுபோல் அவைகள் கரும்பல்ல, நெல் என உணர்ந்து வியக்கிறான். அங்கிருந்து தனது பார்வையை மேலும் அப்பால் செலுத்துகிறான். தொலைவில் அடர்த்தியான காடு தெரிகிறது. அதன் அருகே சென்றபோதுதான் அவை காடல்ல-கரும்பெனக் கண்டான். வளமையும், செழுமையும் திரட்சியுமான கரும்புகளை கண்டு மகிழ்ந்தவாறு மேலும் அவன் உள்ளே நுழைகிறான். குயிலினங்கள் கீதமிசைக்கும் சோலையின் பேரழகை அங்கு கண்டான். வழியில் குவளையும் சங்கும் கண்டான். வழியில் ஒருபுறம் வாவியும் அதன் கரையில் இளமையுடைய அன்னமும் இருக்கக் கண்டான். அதன் வெளிப்புறத்தில் கடல் போன்ற குளங் கண்டான். அதற்குப் பின் பிறநாடு எவையும் சோழநாட்டுக்கு நிகராகாதெனத் தெரிந்து கொண்டான்.

இவ்வாறு தொடர்ச்சியாக ஒரு கதை போல் சோழநாட்டின் இயற்கை வளத்தைச் சேக்கிழார் கூறும் பாங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

சோழநாட்டின் வயற்பரப்பில் ஒன்றன் மீதொன்று ஆடி விழும் முதிர்ந்த நெல்மணிகள் அனைத்தும் பால் ஊறி காய்த்து முதிர்வதால் ஏற்படும் பாரத்தினால் தலைவணங்கிய நிலையில் உள்ளன. இதனைக் காணும் சேக்கிழாரின் உள்ளத்தில் அடியார்கள் சந்திக்கும் காட்சி தோன்றுகிறது. வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் என்று இறைவனை எப்பொழுதும் வணங்கிக் கொண்டிருக்கும் அடியார்கள் அன்பின் வயப்பட்டவர்களாய் இருப்பார்கள். இவ்வடியார்கள் ஒன்றாக கூடும்போது ஒருவருக்கொருவர் தலைவணங்கி வணக்கம் கூறி மகிழ்வர்.

இவ்வாறு அடியார்கள் ஒருவருக்கொருவர் தலைசாய்த்து வணக்கம் கூறிமகிழ்தல்போன்ற

முதிர்ந்த நெற்பயிர்கள் ஒன்றன்மீதொன்று சாய்ந்து விழுந்துள்ளது எனப் பக்திப் பரவசத்தோடு தெய்வச் சேக்கிழார் பாடுகிறார்.

''பக்தியின் பாலராகிப்பரமனுக் காளாம்அன்பர்
சூத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யன்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்''.

இறைவனுக்கு ஆட்செய்யும் அடியார்கள் அரன்போலவே அடியார்களையும் வணங்குவர்.

''செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம்கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர்வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே''

என மெய்கண்ட சாத்திரம் அடியார் இலக்கணம் கூறுகிறது.

திருவாரூர் நகர அடியார்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிர் கொண்டழைத்த போதும், சீகாழியில் திருஞானசம்பந்தப் பெருமானை அப்பர் சுவாமிகள் தரிசித்த பொழுதும் நிகழ்ந்த செயல்களில் அடியார் இலக்கணத்தின் இயல்பினை நாம் நன்கு உணரலாம்.

''வந்தெதிர் கொண்டு வணங்குவார்முன்
வன்றெண்டர் அஞ்சலி கூப்பிவந்து....''
(தடுத். புரா. 123)

''...தொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற வணைந்தங்கரசு மெதிர்வந் திறைஞ்ச...''
(திருஞா. புரா. 271)

''....பணிந்தவர்தங் கரங்கள் பற்றி எழுதரிய மலர்க்கையா லெடுத்திறைஞ்சி.
(திருநா. புரா. 182)

இவையே நமது சமயத் தலைவர்கள், ஆசாரியர்கள் நமக்கு நடத்திக் காட்டிய முறையாகும். முதிர்ந்த நெற்பயிர்கள் ஒன்றன் மீதொன்று சாய்ந்து விழும் காட்சியைக் கண்டவுடன் அதனை அடியார் இலக்கணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் சேக்கிழாரின் கவியுள்ளம் அழுத்தமான சமய உணர்வினை வெளிப்படுத்தி அவர் ஒரு தெய்வக் கவிஞர் என திக்கெட்டும் பறை சாற்றுகிறது.

சோழநாட்டின் வீதிகளில் எந்நாளும் திருவிழாக் கோலம் தான். அங்கே இனிய முழக்கங்கள் எப்பொழுதும் கேட்ட வண்ணமுள்ளன. இல்லங்களிலோ விருந்தினரை வரவேற்றுச் செய்யும் விருந்தின் சிறப்பொலி எதிரொலிக்கும். அங்கே அறிவில்லாப் பறவைகளும், விலங்குகளும் கூட நீதிநெறி தவறாமல் வாழ்கின்றன. சோழநாட்டிற்குள் நோய்களும் பிணிகளும் வர அஞ்சுகின்றன. ஏன் தெரியுமா? சோழ நாட்டு மக்கள் எந்நாளும் எப்பொழுதும் திருவைந்தெழுத்தினை ஓதி வருவதால்தான். கேட்பதை வாரி வாரி வழங்கும் காமதேனுகூட இந்நாட்டில் இருக்க விரும்பும்.

# மகாமக மகத்துவம்

**குடந்தை நகரில் மகாமகம்**
**கோடி கோடியாய் மகாஜனம்**
**குடந்தை முழுதும் கோயிலாம்**
**கும்பிட கோடி நன்மைகளாம்**

—குடந்தை அகிலன், எம் ஏ

''வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா தனையரும்மனையில் தப்பா
நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்''.

என்னும் இப்பாடல் சோழநாட்டின் சிறப்பினையும், மக்களின் விருந்தோம்பலையும், அவர்களின் ஆன்மீக உணர்வுகளையும் ஒருங்கே நமக்கு படம் பிடித்து காட்டுவதாக அமைந்துள்ளது.

ஒரு நாட்டின் பெருமையெல்லாம் அந்நாட்டின் அரசை பொறுத்தே அமையும். கொடுங்கோல் அரசன் ஆட்சி செய்யும் நாட்டைவிட கொடுமையான புலி வாழும் காடே நன்று என்பதால் ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் நல்வேந்தனே காரணமாம் எனபர் சான்றோர்.


நீர்ச்சிறப்பு - நிலச்சிறப்பு - குடிச் சிறப்பு-மனைச் சிறப்பு - மக்கட் சிறப்பு - அறச் சிறப்பு மற்றும் ஏனைய எல்லா சிறப்புக்களாலும் பெருமை பெற்ற சோழ நாடு வெற்றியரசாகிய அநபாயச் சோழரது அழகிய வெண்குடை நிழலிலே குளிர்ந்து வாழ்கின்றது. அந்நற்றமிழ் நாட்டைப் புகழ என்னால் இயலுமோ எனச் சோழர் நாட்டின் சிறப்பைச் சோழர் ஆட்சியின் சிறப்புடன் இணைத்து சேக்கிழார் பெருமிதப் படுகிறார்.

''நற்றமிழ் வரைப்பின் ஓங்கு நாம்புகழ் திருநாடென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்கும்
கொற்றவன் அநபா யன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்ப லாமோ''.

**(தொடரும்)**


சித்திர பாரதம்
கதை வடிவம் செவ்வேள்
படம்: MN ராஜா
சக்கரமலையைக் கடந்து திவாகர மலை எல்லையை வீமன் அடையும் போது புண்டரீகன் எனும் அரக்கன் எதிர்ப்படுகிறான்.
மூவரும் தேவருமே வர அஞ்சும் என் வனத்திற்கு வந்த நீ யாரடா? உன் ருசி மிகுந்த மாமிசத்தை எனக்கு உண்ணத் தர வந்தாயா நீ? சொல்
நீண்ட குகை போன்ற வாயில் நீண்டிருக்கும் கோரைப் பற்கள் தெரிய புண்டரீக அரக்கன் அதட்டவும் அஞ்சிடவில்லை.
அடேய் அரக்கா! உன் உயிரை உண்ணவே ஆசை கொண்டு நான் வந்தேனடா!
மலைகளையும், மரங்களையும் பறித்து ஒருவர் மேல் ஒருவர் வீசி, அவ்விருவரும் போர் புரியக் கண்டு அட்டதிக்குகளுமே அஞ்சி நடுங்குகின்றன.
"வாயுகுமாரா! இவ்வரக்கன் தோள்கள் மேல் உன் கதையை வீசு. அவன் கதை முடியும்." என்று எழுகிறது ஓர் அசரீரி.
அசரீரியின் வாக்கில் நம்பிக்கை கொண்டு தன் சத்துரு காதினி கதையைப் புண்டரீகன் மேல் வீசுகிறான் வீமன்.
புண்டரீகனைக் கழுகுகளுக்கும் பருந்துகளுக்கும் உணவாக்கிச் சந்திரசைல மலையைக் கடந்து அமராவதியும் ஒப்பாகாத அளகாபுரிக்கு வந்து சேருகிறான் வீமன்.
தான் தேடிவந்த பரிமளப் பொற்றாமரை மலர் ஆங்கோர் அழகிய தடாகத்தில் ஏராளமாகப் பூத்து விளங்கவும், அம்மலர்ப் பொழிலை அரக்கர்கள் பலர் காவல் செய்து நிற்கவும் காண்கிறான் வீமன்


அரக்கர்களை இலட்சியம் செய்யாமல் வீமன் போய் மலர்களைப் பறிக்க, ஆரவாரத்துடன் ஓடிவந்து அரக்கர்கள் வீமனை வளைத்துக் கொண்டு போரிடுகிறார்கள்.
சுந்தரவனத்து அரக்கர்களை ஆஞ்சநேயர் முன்னாளில் வதைத்தொழித்ததைப் போலவே வீமனும் அளகாபுரி அரக்கர்களைக் கொன்றழிக்கிறார்.
தப்பிய சில பொழிற் காவலர் குபேரனிடம் சென்று முறையிட்டனர்.
சேனாதிபதி செங்கோடனா! நீ போய் அந்த பூலோக வீரனை உயிரோடு பிடித்து வா!
அளவிலாத அரக்க சேனையுடன் வந்த செங்கோடனன் வீமனுடன் போர்புரிகிறான். சத்துருகாதினியின் மொத்துண்டு தப்பித்தேன்; பிழைத்தேன் என ஓடி விடுகிறான் செங்கோடனன்.
அரசே! வந்திருப்பவன் சாதாரண மானுடன் அல்லன்! சிவபெருமானே மானிடனாக வந்து போரிடுகிறார். அவருடன் சமாதானமாகவே போவதுதான் நமக்கு நல்லது!
மகனே உருத்திரசேனா! வந்திருப்பவர் யார்? எதற்காக வந்திருக்கிறார் எனக் கேட்டு அவருக்கு விருப்பமானதைக் கொடுத்தனுப்பி வா.
கண்ணனின் மருகனும், தருமரின் தம்பியுமான வீமன் பொற்றாமரை மலர் பொருட்டே வந்திருப்பதை அறிகிற உருத்திரசேனன் வேண்டிய மலர்களை வீமனுக்குத் தந்து மகிழ்வுடன் அனுப்புகிறான்.



**அருள்மிகு ஆதிகம்பட்ட தனி அம்பாள் - விசுவநாதர் - சோமாஸ்கந்தர் அம்பாள்**

**கும்பகோணத்தில் கோயில்கள் தொடர்ச்சி,..**

களைத் தாம் ஏற்கின்றன. எனவே, அப்பாவங்களை நீக்கித் தாமும் தூய்மையாகக் கருதி, அவ்வாறுகள் கன்னிகை வடிவந்தாங்கிச் காசியை அடைந்து, சிவபெருமாஊை வழிபட்டு தவங்கிடந்தன. அத்தவத்திற்கு இரங்கிய பெருமான், அக்கன்னியர் முன்தோன்றி தென் திசைச் சென்று, குடமூக்குத் திருக் குளத்தில் மூழ்கி, பாவங்களைக் களைந்தெரிய அருள் பாலித்தார். அந்நாள் தொடங்கி பன்னிராண்டுகட்கு ஒரு முறை மகா மகத்திருநாள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.


''கன்னியர் மொழிந்த வற்றைக்
கண்ணுதற் பெருமான் கேட்டு
மின்னிய முறுவல் பூத்து
மேதகு நதிகாள் ஒன்றும்
முன்னிய வேண்டா யாரும்
மொழிபுகழ்ந் கும்பகோணம்
மன்னிய அழலோன் திக்கில்
வயங்குமோர் தீர்த்தமுண்டால்''

''ஆயவத் தீர்த்தம் தன்னில்
ஆண்டளப் பான்சிங் கத்து,
மேயமா மகந்தான் மூழ்கில்
விடுபடும் பாவமெல்லாம்
தூயவத் தயிமின்வெள்ளி
மலையினும் தூய தாகும்
பாய நம் பிரிய மெல்லாம்
ஆவயிற் பதியு மன்றே.''

'அத்தலக் தந்தநாளும்
ஆண்டுபன் னிரண்டுக் கோர்நாள்
உத்தம மாக மேவும்
மற்றதும் அணித்தாய் உற்ற
தெத்தலங் களினும் மேலாம்
அத்தலத் தின்னே சென்று
புத்தமு தனையிர் மூழ்கும்
போமென்றான் கருணை மூர்த்தி.''

என்னும் பாடல்கள், ஒன்பது கன்னியர் பேறு பெற்ற வரலாற்றினைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றதனால் தான், சோழவளநாடு சோறுடைத்து எனப் புகழப் பெற்றது. ஈண்டு, ''வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரிப் பாய்தலால் நீர்வளமும்-நிலவ்ளமும் இயல்பாகவே அமையப் பெற்று, கட்டுக் கலங்காணும்கதிருழக்கு நெற்காணும்; அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்; மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று, ஆனைகட்டிப் போரடிக்கும் அழகிய வளநாடு'' என்ற பழம்பாடற் சிறப்பிற்கும். ''ஒரு பிடி படியும் சீரிடம் எழுகளிறு புரக்கும்'' என்ற புறநானூற்றுப் பெருமைக்கும் நிலைக்களனாய் அமைத்து, உடல் நிலைப்பிற்கு தேவையான உணவாகிய சோற்றைத் தருகின்றது எனப் பொதுவாகப் பொருள் கொள்ளினும், உயிர்நிலைப்பிற்குத் தேவையான சோறு என்னும் வீடுபேற்றைத் தருகின்றது என்ற சிறப்பு நுண்பொருளும் அச்சொல்லின் உள்ளே அமைந்து கிடப்பதைக் காணலாம். ஏனெனில், மலைப்பகுதியே இல்லாத சோழ நாட்டில் தான் கற்கோவில்கள் மிகுதியாக விண்ணளாவிய கோபுரங்களுடன் காட்சியளிக்கின்றன.



எனவே, சோழ நாட்டில் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற திருவூர்கள் பலவற்றுள்ளும் சிறப்புடையதாக விளங்கும் திருவண்ணாமலை, காசி, திருக்காளத்தி, திருக்கேதாரம், திருவாரூர், திருவலஞ்சுழி, திருவேரகம், தில்லை, திருவெண்காடு, திருவிடைமருதூர் என்னும் பதினொரு திருவூர்களினும் ஊழிக்காலத்தும் பாழ்படாமல் நிலைபெற்றுத் திகழ்ந்த சிறப்புப் பற்றித் திருக்குடந்தை யாவற்றினும் தலைசிறந்த திருவூர்த் திருநகராகத்திகழ்கின்றது.

மாமகக்குளத்தின் வடபால், துறைக்கரைகண் அமைந்துள்ள, விசுவநாதப் பெருமான் திருக்கோவிலில் ஒன்பது கன்னியர்க்கும் திருவுருவங்கள் அமைக்கப் பெற்று வழிபடப் பெறுகின்றன.

மேலும், இப்பொய்கையில், எண்ணற்ற புனித .ஆறுகள் ஒன்றாக இணைந்துள்ளன எனவும் கூறப்படுகின்றது. மாமக நீராடவரும் அன்பர்கள், மாமகப். பொய்கையில் நீராடிப் பின்பொற்றாமரைக் குளத்தில் நீராடி அதன் பின்காவிரியில் நீராடி, இறைவனை வழிபட்டுச் செல்ல வேண்டுமெனவும் கூறப்படுகின்றது.

''இடைமருதர் முதலாஓர் ஐவர்நா
கேசர், நடமியற்ற வல்லார்
கடையணுகாச் சோமேசர், காரோணர்
அபிமுகர்நற் கவுத மேசர்
தடையிலருட் பாணபுரி யார்சுதரி
சனர்சார்ங்க தரர்வ ராகர்
அடைவரதர் இவர்சூழ அமர்கும்ப
லிங்கேசர் அடிகள் போற்றி.''

என்னும் திருக்குடந்தைப் புராணம் நூலின் வாயிலாக, 1. திருவிடைமருதூர் 2. திருநாகேச்சுரம் 3. திருத்தாரேச்சுரம் (தாராசுரம்) 4. திருவேரகம் (சுவாமிமலை) 5. திருப்பாடலவனம் (கருப்பூர்) என்னும் ஐந்தும் ஐந்திருவூர்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன. இவ்வைந்திருவூர்களையும், மாசித்திருநாளில் முறையாகவும், வலமாகவும் வழிபடல் வேண்டும் என்று குடந்தைப் புராணம் கூறுகின்றது.

மேற்கண்ட ஐந்திருவூர்களையும் பஞ்சக் குரோசத்தலங்கள்' என்பர். குரோசம் என்பது இரண்டரை நாழிகைத் தொலைவு அல்லது இரண்டரைகல் தொலைவு என்னும் பொருளதாகும். கயிலையிலிருந்து போந்த அருள்மிகு மங்கலநாயகி, அமுதத்தால் நனைந்த இவ்வைந் திருவூர்களிலும் .ஒவ்வொருநாள் தங்கி வலமாகக் குடந்தை எய்தினள் என்பது புராண வரலாறு.

**ஐந்திருவூர்களின் அருஞ்சிறப்பு :**

1. **திருவிடைமருதூர்:**— இத்திருவூர் பழம் பெருமை வாய்ந்ததாகும். இது, குடந்தையிலிருந்து கிழக்கே 6 கல் தொலைவில், நெடுஞ்சாலையைச் சார்ந்துள்ளது. அருளாளர் பெருமக்களால் பாடல் பெற்றச் சிறப்புடையது. இத்திருக்கோவிலின் கண் மருதமரம் நின்று நிலவுகின்றது. இதனால், இப்பெருமானுக்கு மருதப்பர் என்னும் பெயர் வழங்கப் படுகின்றது; அம்மையின் .பெயர் பெருமுலை நாயகியம்மையார் என்பதாகும்.

கயிலையில், சிவபெருமான் உமையவளுக்கு ஆகமப்பொருளினை விளக்குங்கால், இறைவி, இறைவனை நோக்கித் தாங்கள் இம் மண்ணுலகில் உள்ள திருக்கோவில்களில் எவ்வூரில் மகிழ்வுடன் எழுந்தருள்வீர் என வினவ பெருமான் உடனே உமையம்மையுடன் விடையூர்ந்து, திருவிடைமருதூர் திருக்கோவிலின் கண் இழிந்துறைந்தார். இத்திருவூரின் பெருமையினை முருகப் பெருமானே முனிவர்கட்கு எடுத்துரைக்கும் அளவுக்கு பெருஞ்சிறப்புடையது. இப்பெருமானையும், பெருமாட்டியையும் வழிபடும் அன்பர்கட்குத் தீவினை அகலும். மக்கட்பேறு, கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவை வாய்க்கப் பெறும், பித்தம் பிடித்தவர்கள் இத்திருக்கோவிலின் மூன்று திருச்சுற்றுகளையும், நாடோறும் வலம் வந்து வழிபட்டு பித்தம் தெளிகின்றமையை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

சோழமன்னன், வரகுணபாண்டியமன்னன் பட்டினத்து அடிகள், பத்திரகிரியார் முதலியோர் இப்பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றனர். ஆண்டுதோறும் தைப்பூசம் நன்னாளில் இப்பெருமானுக்குப் பெருந்திருவிழா நடை பெறுகின்றது.

''முந்திச் செய்வினை யிம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவு மாட்டேன்
சிறுச்சிறி தேயிரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடுமெம் மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தைநீயெனக்கு உய்வகை யருளாய்
இடைமருதா ருறை எந்தை பிரானே
— ஆளுடைநம்பி

**2. திருநாகேச்சரம் :** இது, குடந்தையின் தென்கிழக்கில் 3 கல் தொலைவில் காரைக்கால் சாலையைச் சார்ந்து அமைந்துள்ளது. சிவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், பன்னிரண்டாம் திருமுறையாகிய, திருத்தொண்டர் மாக்கதை என்னும் பெரியபுராணத்தைப் பாடியருளிய சேக்கிழார் பெருமகனார், இத் திருக்கோவிலில் பெரிதும் ஈடுபட்டு பலகாலும் இங்கே தங்கி இருந்தார். இவரால் பல திருப்பணிகள் இங்கு நடைபெற்றுள்ளன. இவ்வடிகளினுடைய திருவுருவம் தாங்கிய சிலையும் ஈண்டு அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் அப்பன் நாகநாதப் பெருமான் எனவும், அம்மை பிறையணிவாணுதலாள் எனவும் பெயர்பெற்றுள்ளனர். இப்பெருமானை ஆளுடைபிள்ளை, ஆளுடை அரசு, ஆளுடை நம்பி ஆகிய மூவரும் தம் தேவாரத் திருப்பதிகங்களில் பாடிப்பரவியுள்ளனர்.

நாகங்களுக்கு அரசனாகிய நாகவரசன், இப்பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றதனால் இவ்விறைவன் நாகநாதர் என அழைக்கப்படுகின்றார்.

''தூயவனை, வானோர்க்கும் ஏனோ ருக்கும்
தலையவனை மலையவனை உலகமெல்லாம்
ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை
அழலவனை நிழலவனை அறியவொண்ணா
மாயவனை மறையவனை மறையோர் தங்கள்
மந்திரனைத் தந்திரனை வளராநின்ற
தீயவனைத் திருநாகேச் சுரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேரா தாரே

— திருநாவுக்கரசர்

**3. திருத்தாரேச்சுரம் (தாராசுரம்) :** இத்திருவூர் திருக்குடந்தை நன்னகர்க்குத் தென்மேற்கில்அமைந்துள்ளது. இத்திருநகருக்கு உருத்திராக்கவனம் என்ற பிறிதோர் பெயருமுண்டு. அஃதாவது, ஈண்டு உருத்திராக்க மரமிருப்பதால், இதற்கு இப்பெயர் அமையப் பெற்றது.

முன்பொருகால், தேவேந்திரனின் யானை துர்வாச முனிவரின் சாபத்தினால் கரிந்து படவே, இத்திருவூர் மருவி, இவண் எழுந்தருளியிருக்கும் பெருமானை வழிபட்டு மீண்டும் தன் உடம்பை ஒளி மயமாக்கிக் கொண்டது. இதனால், ஐராவதேச்சரம் எனவும் ஒரு பெயருண்டு. சூரசேனன் என்னும் மன்னன், தாரன் முதலானோர் இப்பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

**4. திருவேரகம் (சாமிமலை) :-** இத்திருவூர் குடந்தைக்கு மேற்கில்-காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. முத்தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் மூவிருபடைவீடுகளுள் இஃது ஒன்று. கந்தன் தன் தந்தையாகிய கண்ணுதற் பெருங் கடவுளாம், சிவபெருமானுக்கு முளை மந்திரத்தின் பொருளை ஓதியருளிய சிறப்புமிக்க இடமாகும். ஈண்டு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் இறைவனாகி சிவபெருமானுக்கே குருவாக அமைந்ததால் சுவாமிநாதன் என்னும் பெயர் பெற்றான். அருணகிரிநாதர் தம் திருப்புகழின், ஏரகம் மேவிய நம்பிரானைப் பாடிப் பரவி ஏற்றிப் போற்றியுள்ளார்.



அருள்மிகு சாரங்கபாணி — உபய நாச்சியார்

**5. திருப்பாடலவனம் (கருப்பூர்):** இத்திருவூர், குடந்தை நகர்க்கு வடகிழக்கில் இரண்டரை கல் தொலைவில் உள்ளது. பாடலம் என்பதற்குப் பாதிரிமரம் என்று பெயர். இத் திருக்கோவில் பாதிரிமரத்தைக் கொண்டுள்ளதால், இவ்வூருக்குப் பாடலவனம் என்று பெயர் அமைந்தது.

கூறை என்னும் சொல் மங்கல ஆடை என்னும் பொருளுடையது. அஃதாவது, திருமணக்கோலத்தில் திருப்பூட்டும் கோலத்தில் மணமகள் சிறப்பாக உடுத்தும் சேலைக்குக்கூறை என்று பெயர். அத்தகைய கூறை சேலையைப் பெரிதும் செய்தமையால், அவ்வூர் கூறைநாடு என வழங்கலாயிற்று. கூறை நாட்டுக் கருப்பூர் என்பது காலப்போக்கில் மருவி கொரநாட்டுக் கருப்பூர் என வழங்கப்படுகின்றது; இஃதே பாடலவனம் என்பதாம்.

—[அடுத்த இதழில் நிறைவு பெறும்]

**நன்றி :** *1980 மாசி மகத்தையொட்டி, வெளியான 'கும்பகோண வழிகாட்டி' மலரிலிருந்து நன்றியுடன் வெளியிடப்படுகிறது.*

# அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில்,

## விருத்தாசலம் நகர் மற்றும் வட்டம், தென்னாற்காடு மாவட்டம்:

**மாசி மகப் பெருவிழா பசலி 1401**

**ஆழத்துப் பிள்ளையார் வணக்கம்**

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைச் சாய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

அன்புடையீர்,

விருத்தாசலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. தென்னாட்டில் விருத்தகாசி எனத் திகழ்வது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், அருணகிரிநாதர், குமாரதேவர், துறைமங்கலம் சிவப்பிரகாசர், குருநமச்சிவாயர், இராமலிங்கசுவாமிகள், சொக்கலிங்க அடிகள் முதலிய பெரியோர்களால் போற்றிப் பாடப்பெற்றது. உலகில் உள்ள பிற மலைகள் தோன்று வதற்கு முன்னரே சிவபெருமான் இங்கு ஒரு குன்று உருவில் .தோன்றி பிரம்மனுக்குக் காட்சி அளித்தமையால் இத்தலத்திற்கு திருமுதுகுன்றம் அல்லது விருத்தாசலம் (விருத்தம்-முதுமை; அசலம்-குன்று) என்று பெயர் வந்தது எனத் தல வரலாறு கூறுகிறது. உமையவள் இத்தலத்தில் இறக்கும் உயிர்களின் கர்ம பந்தங்களை நீக்குகிறாள். சிவபெருமான் பஞ்சாட்சர மந்திர உப தேசம் செய்து பிறவித் துன்பங்களைப் போக்கி மோட்சத்தை கொடுக்கின்றார். இத்தலத்தில் தங்கி ஈசனையும், அம்மையாரையும் வழிபட்டு பல முனிவர்களும் பெரியவர்களும் முக்தி பெற்றி ருப்பதாகப் புராண வரலாறு கூறுகின்றது. மணிமுத்தாற்றில் நீராடி பழமலைநாதரைப் பூசித்து குருடு, செவிடு, பிணி முதலியவைகளை நீக்கிக்கொண்டிருக்கின்றனர். திருவிழா நாட்களிலும், விசேஷ தினங்களிலும் இறைவனை வணங்கியவர்கள் பாவங்களிலிருந்து விடுபட்டு விரும்பிய பயனை எய்தி இன்புறுவர்.

இத்தகைய பெருமைகள் கொண்ட விருத்தாசலத்தில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு விருத்தாம்பிகை அருள்மிகு பாலாம்பிகை சமேத அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் பெருமாளுக்கு வழக்கம்போல் நிகழும் பிரஜோற்பத்தி வருடம் தைத்திங்கள் 26-ஆம் நாள் 9-2-92 ஞாயிற்றுக் கிழமை அன்று கொடி ஏற்றி பின்கண்ட நிகழ்ச்சிப்படி திருவிழா நடைபெறும். சிவநேசச் செல் வர்கள் தம் செல்வச் சினேகக் குழாங்களுடன் வந்து ஆண்டவனை வணங்கித் திருவருளைப் பெற்று இன்புற வேண்டுகிறோம்.

**திருவிழாக்களில் நிகழ்ச்சி நிரல்கள் விபரம்**

| திருநாள் | தேதி—(தமிழ், ஆங்கிலம்) | வாகன விபரம் |
|---|---|---|
| 1. | தை 26 ஞாயிறு – 9-2-92 | —பகல் 10.15 மணிக்குமேல் 12.00 மணிக்குள் அசுவினி நட்சத்திரம் சித்தயோகம் கூடியமேஷஓரையில் கொடியேற்றம் ஏகாசனமஞ்சம். |
| 2. | தை 27 திங்கள் - 10-2-92 | —இரவு, சூரிய பிரபை |
| 3. | தை 28 செவ்வாய்-11-2-92 | —இரவு, பூதவாகனம் |
| 4. | தை 29 புதன் - 12-2-92 | —இரவு, நாக வாகனம் |
| 5. | மாசி 1 வியாழன் - 13-2-92 | — இரவு, யானை வாகனம் |
| 6. | மாசி 2 வெள்ளி— 14-2-92 | — பகல் 12 மணிக்கு மேல் 1.30 மணிக்குள் திருவாதிரை நட்சத்திரம் கூடிய ரிஷப ஓரையில் அருள்மிகு பழமலைநாதர் வெள்ளி ரிஷப வாகனத்தில் எழுந் தருளி ஸ்ரீவிபசித்து முனிவருக்கு காட்சியளித்தல் |
| 7 | மாசி 3 சனி - 15-2-92 | —மாலை பிச்சாண்டவர் புறப்பாடு, இரவு பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு |
| 8 | மாசி 4 ஞாயிறு— 16-2-92 | — இரவு, குதிரை வாகனம் |
| 9 | மாசி 5 திங்கள்— 17-2-92 | — அதிகாலை 6 மணிக்குமேல் 7.00 மணிக்குள் கும்ப லக்கினத்தில் பஞ்சமூர்த்திகளுக்கும் ரதாரோகனம் செய்து உடன் வடம் பிடித்தல் |
| 10 | மாசி 6 செவ்வாய்— 18-2-92 | —மாசி மகம் தீர்த்தவாரி |
| 11 | மாசி 7 புதன்— 19-2-92 | — தெப்பத் திருவிழா |
| 12. | மாசி 8 வியாழன்— 20-2-92 | — சண்டிகேஸ்வரர் உற்சவம் |

தினசரி இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**இரா. பத்மநாபன்**, பி.எஸ்சி, பி.எல்.
நிர்வாக அதிகாரி

**என். இராஜகோபாலன்**
தக்கார், உதவி ஆணையர்.

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

சித்தர்கள் எனப்படுவோர் வாசி என்ற மூச்சினை அடக்கியாண்டு, யோக சக்தியினால் உடலில் உள்ள மூலாதாரம், தொப்புள், இதயம் இரைப்பையின்நடு, கழுத்து, தலைமுடி என்ற ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலினியை எழுப்பிப் பலப்பல அனுபவமும் வெற்றியும் கண்டு, எல்லாம்ஆன பரம்பொருளில் நிலைத்து சித்தி பெற்றவரே ஆவர். அத்தகைய சித்தராகிய திருமூலர் மரணத்தை வென்று வாழும் வழிமுறைகளையும் திருமந்திரத்தில் செப்பியுள்ளார். ஒரு நாளில் சாதாரணமாக 21600 மூச்சுகள் விடப்படுகின்றன. பிராணாயாமம், சிவயோகம் முதலான சாதனைகளால் சித்தர்கள் மூச்சினை அடக்கி ஆயுளைப் பெருக்குவர்.

''காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்கும் குறியது வாமே'' (602)

''நாட்ட மிரண்டும் நடுமூக்கில்வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கும் அழிவில்லை''

''வளியினை வாங்கி வயிற்றி லடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு தனியனு மாமே'' (551)

''ஈராறு கால்கொண்டு எழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுணர வல்லிரேல்
நீரா யிரமும் நிலமா யிரத் தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே''(702)

போன்ற பலகருத்துக்களால் திருமூலர் இப்புவியில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திருந்த சித்தர் ஆவது தெளிவாகும்.

''திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் அருமந்த
புந்திக்குள்ள நினைந்து போற்றுமடி யார்
சந்திக்கும் தற்பரமே தான்'' தமக்குச்

திருமூலரின் திருமந்திரத்தில் சித்த மருத்துவம் சம்பந்தமான கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினில் உத்தமன் கோயில்
கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றே னே''

உடலை ஓம்புவதன் அவசியத்தைத் திருமூலர் எடுத்துக் காட்டிப் பல்வேறு பாடல்களில் உடலை ஓம்ப வேண்டிய வழிமுறைகளையும் தெரிவித்திருக்கின்றார்.

சித்தராகவும், சித்த மருத்துவராகவும், சிவயோகியாகவும் திகழ்ந்த திருமூலர் புவியில் சுமார் 6,000 ஆண்டுகள் வாழ்ந்திருந்து தம் அரிய கருத்துக்களைத் திருமந்திரமாக வழங்கி இறைவனடி அடைந்துள்ளார். திருமந்திரத்தைக் கற்றவர் எல்லா நலங்களும்பெறுவர் என்பதைத் திருமூலர் தாமே தம் நூலில்

''மூலன் உரை செய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவியை நண்ணுவர் அன்றே'
(சிறப்பு பாயிரம்)

என்று கூறியிருப்பதால் அறியலாம்.

திருமூலர் செய்த ''மூவாயிரந் தமிழ்'' என்ற நூலே, மந்திரம்போல்மக்களுக்குப் பயன்படும் தன்மையை நோக்கி ''திருமந்திரம்'' என்று வழங்கப்படுகிறது. மூவாயிரம் தமிழோடு ''முந்நூறு மந்திரம்'' ''முப்பதுபதேசம்' ஆகிய இரு நூல்களும்கூட திருமூலர் செய்தனவாக அறியப்படுகின்றன.

''மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றுமொன்றாமே.''
(சிறப்புப் பாயிரம்)

எனவரும் பாடல் காண்க.

திருமூலர்தம் மாணாக்கர்களில் ஒருவரான கஞ்சமலைச் சித்தர் அமைத்த மடம் இன்றும் சேலம் மாவட்டத்தில் ''சித்தர் கோயில்'' எனப் பிரசித்திப் பெற்று விளங்குவது குறிப்பிடத் தக்கது.



திருமிகு தலைமைச் செயலாளர் ஐயா அவர்களின் ''அருளாளர்களின் அனுபவம்'' கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில்

## திருவேற்காடு, சென்னை - 600 077.

### அன்னையின் ஆலயத்தில அன்னதானம் செய்ய வாரீர் !

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி'' —குறள்

என்ற வள்ளுவப் பெருந்தகையின் அருள்வாக்கிற்கிணங்க வேண்டுவன வழங்கும் கலியுக நாயகியாம் அன்னை அருள்மிகுதேவிகருமாரியம்மன் திருக்கோயிலில், 'தானங்களில் சிறந்தது அன்னதானம்' என்ற அன்னதானத்தின் சிறப்பை பக்தர்களுக்கு உணர்த்தி இதன் நற்பயனையும் அன்னையின் பேரருளையும் பெற்று அனைவரும் பெருவாழ்வு வாழ அன்னதான அறக்கட்டளை துவக்கப்பட்டது.

அன்னதான அறக்கட்டளைக்குரிய கட்டணம் ரூ. 5001- இத்தொகையிலிருந்து பெறப்படும் வட்டியைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 100 ஏழை எளியோர்களுக்கு அன்னதானம் கட்டளைதாரர் விரும்பும் நன்ஂனாளில் செய்யப்படும்.

பக்தப் பெருமக்கள் இவ்வன்னதான அறக்கட்டளையிலும், மற்றுமுள்ள பல்வேறு அறக்கட்டளைகளிலும் பங்கேற்று. அற்றார் அழிபசி தீர்த்து அன்னையின் அருள் பெற்று பன்னெடுங்காலம் பெருவாழ்வு வாழ அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

### தங்கத் தேர் பவனி

இத்திருக்கோயிலில் 14 லட்சம் ரூபாய் செலவில் அன்னை கருமாரிக்கு புதியதாக தங்கத்தேர் செய்யப்பட்டுள்ளது.

அம்மனை தங்கத்தேரில் திருஉலா புறப்பாடு செய்ய விருப்பம் உள்ள பக்தர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் மூன்று தினங்களுக்கு முன் ரூபாய் 751- (ரூபாய் எழுநூற்று ஐம்பத்தி ஒன்று மட்டும்) காணிக்கை செலுத்தி அதற்கான ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

தாங்கள் குறிப்பிட்ட நாளில் மாலை 7.00 மணிக்கு அம்மனுக்கு தங்கத் தேரில் புறப்பாடு செய்து அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அருட்செல்வர் தவத்திரு சுவாமி இராமதாசர்
தேவி உபாசகர்.

வே. முனியசாமி, எம்.ஏ., பி.எல்.
துணை ஆணையர்,
நிர்வாக - அதிகாரி-தக்கார்.

 பதிவு எண். எம். 7039



அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள நம் அறநிலையத்துறையின் எழில்மிகு அரங்கை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம் திருக்கரங்களால் குத்து விளக்கேற்றித் துவக்கி வைக்கிறார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்., அவர்களும், துணை ஆணையாளர் திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்., அவர்களும் உடன் உள்ளார்கள்.